# சிருஷ்டி



ஜெய்மா பவானி

# சிருஷ்டி

**ஜெய்மா பவானி**

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **சிருஷ்டி** |
| ஆசிரியர் | : | **ஜெய்மா பவானி** |
| மொழி | : | **தமிழ்** |
| வகை | : | **வேதாந்தம்** |
| முதற்பதிப்பு | : | 2020 |
| பக்கங்கள் | : | **114** |
| கணினி அச்சு | : | **ஓம் கிராபிக்ஸ்** |
| விலை | : | **அகவிழிப்பு** |

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:


| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| | | |
| 1. | சிருஷ்டியின் தொடக்கம் | 12 |
| 2. | ஆவரண சக்தி - விக்ஷேப சக்தி | 25 |
| 3. | மூன்றுவிதமான குணங்கள் | 46 |
| 4. | மனமும், குணமும் | 70 |
| 5. | பஞ்சீகரணம் | 75 |
| 6. | தத்துவங்கள் | 84 |
| 7. | பஞ்சபூத சக்திகள் | 96 |
| 8. | விசாரத்தின் விளைவு | 105 |

# அறிமுக உரை

ஒவ்வொருவரும் எதையோ அடைய விரும்பி, அதைத் தேடிக் கொண்டும், ஓடிக்கொண்டும் இருக்கின்றார்கள். இந்த ஓட்டத்தின் இறுதி நோக்கம், இனிதான இன்பத்தை இயன்ற வரை இந்த உலகத்தில் அடைந்து, அனுபவிக்க வேண்டும் என்பதைத்தான் எல்லோரும் அறிந்து இருக்கின்றார்கள்.

ஒரு சராசரி மனிதனின் வாழ்வில் சுகம் 25%-ம் துக்கம் 75%-ம் நிறைந்துள்ளது என்பது அவனது எண்ணம்.

ஒரு சிறு புழு, பூச்சியிலிருந்து, மிகப்பெரிய யானை என, மனிதன் வரை ஒவ்வொருவரும் உயர்வான இனபத்தை அடையவே தொடர்ந்து முயற்சிக்கின்றனர். இருந்தாலும் இந்த தொடர் இன்பத்தை எப்படிப் பெறுவது? என்பது பற்றி மற்ற எந்தப் பிறவிக்கும் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்றாலும், இந்த மனிதப் பிறவியில் மட்டும் அடைய முடியும் என்றாலும், அவனுக்கும் எந்தப் பள்ளிக்கூடமும், பல்கலைக் கழகமும் கற்றுத் தருவதில்லை.

மேலும், இந்த இன்பம் எங்கு, எதில் கிடைக்கும் என்பதுவும் இவர்களுக்குப் புரிவதில்லை.

எத்தனையோ ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால், எதையாவது செய்து, எந்த வகையிலாவது அந்த இன்பத்தை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றுதான் அனைவருமே ஆசைப்படுகின்றனர்.

இந்த உயர்நிலை இன்பத்தை எவ்வாறு அடைவது என்பது பற்றி எல்லோருக்கும் தெரியாததால் அவர்கள் தங்களின் **ஐம்புலன்கள், மனம்** மற்றும் **புத்தியின்** மூலமாக அடைந்து விடலாம் என அதைத் தேடி அங்கும், இங்கும் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அதுவும் தற்காலிக இன்பமாக மட்டுமே இருக்கின்றதே தவிர, இறுதியான இன்பமாக இல்லாமல் போவதால், அந்த இன்பம் இடையிலேயே தீர்ந்துப் போனதும், மீண்டும், அடுத்த ஒன்றில் அந்த இன்பத்தை எப்படி அடைவது என்று, எதை எதையோ செய்கின்றனர்.

இவர்கள் எதை இன்பம் என்று பிடித்து வைத்துக் கொண்டிருக்கின்றார்களோ, அதை முழுவதுமாக விட்டு விட்டால் மட்டுமே, அந்த உண்மையான இன்பம் என்ன வென்பதே இவர்களுக்குத் தெரியும் என்று எடுத்துக் கூறத்தான் அனைத்து ஆன்மீக சாஸ்திரங்களும் அவசியமாகின்றது.

அத்தகைய ஆன்மீக சாஸ்திரங்களைக் கற்று, அந்த ஆன்மாவை அறிந்து, அதை தன் உள்ளுணர்வாகவே உணர்ந்து, தான் அடைந்த அந்த ஆனந்த அனுபவத்தை, இந்த உலகத்தில் உள்ள அனைவரும் அடைய வேண்டும்

என்ற ஆவலில், அரிய பல உண்மைகளை மிகவும் எளிதாக, எல்லோரும் கற்று பயனைடையும் பொருட்டு, அன்பு உள்ளம் கொண்ட இந்த நூல் ஆசிரியரான **திருமதி ஜெய்மா பவானி** அவர்கள் இந்த நூலின் வாயிலாக எடுத்துக் கூறுகின்றார்.

பொதுவாக, மனிதப் பிறவி இரு காரணங்களுக்காக மட்டுமே கிடைக்கப் பெறுகின்றது.

முதலாவது காரணம் - 65% தன்னுடைய பிராரப்த கர்மாவை கழிப்பதற்கும், மற்றும் இரண்டாவது காரணம் - 35% ஆன்மீக பயிற்சியால், அவன் மேற்கொள்கின்ற உயர் தவத்தினால், சித்த சுத்தியை அடைந்து, ஆன்மாவை அறிந்து அதனுடன் இரண்டறக் கலந்து விடுவதற்காகவும் மட்டுமே ஆகும்.

அத்தகைய ஆன்மாவை அறிவது என்பது, அரிதான இந்த மனிதப் பிறவியில் மட்டுமே சாத்தியம் என்பதை இந்த நூல் எளிதாக எடுத்துக் கூறுகின்றது.

அத்துடன், அந்த மனித உடல் எவ்வாறு, எதனால் உண்டாகின்றது. அதன் மகத்துவம் என்ன? அதற்கான தத்துவங்கள் யாவை? அந்த தத்துவங்களின் வாயிலாக தன்னை அறிவது எவ்வாறு போன்ற, பல்வேறு பகுத்தறிவு வாய்ந்த வாழ்வியல் உண்மைகளை எளிதாக எடுத்துக் காட்டியுள்ள பாங்கு மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கின்றது.

மேலும், மனிதன் தன் மனதினால் இயக்கப்படுகின்றான். அந்த மனமே மனிதனின் பல்வேறு பாவ, புண்ணிய செயல்களுக்குக் காரணமாக அமைந்துள்ளது. இந்த பாவ, புண்ணிய கர்மங்களே மனிதனின் சுக, துக்கங்களுக்குக் காரணமாகின்றது.

இதில், சுக, துக்க சுழற்சியிலிருந்து விடுபட ஒரே வழி, மனிதன் சுகத்தை மட்டும் நாடாமல், எது நடந்தாலும், அது ஈஸ்வர அனுக்கிரஹம் என்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் இந்த நூலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஏனென்றால், மனிதன் புண்ணிய பலனை எதிர்ப்பார்த்து, எழுகின்ற ஏராளமான எண்ண அலைகளினால், பல்வேறு காரியங்களை செய்துக் கொண்டு, அவைகளுக்கு அடிமையாகி, அதன் வாயிலாக ஆனந்தத்தை மட்டும் அனுபவிக்க முயலும் போது, அதனால், பல பாவ, புண்ணியங்களில் சிக்கி, மீண்டும் மீண்டும், **பிறப்பு - இறப்பு** என்ற சக்கர சுழற்சியில் இருந்து விடுபட முடியாமல் இருக்கிறான்.

இந்த உலகை, உலகுக்கு அப்பாலுள்ள இறைவன் சிருஷ்டித்தான் என்ற இருமைகளை ஏற்காமல், ஒன்றேயான இறைவன் தானே இந்த உலகமாக மாறினான் என்பதைத்தான் இந்த நூல் எடுத்துக் கூற வருகின்றது.

இது சிருஷ்டி. இந்த சிருஷ்டிக்கு இதுதான் காரணம் என்று கூறியவர் ஒருவருமில்லை. லீலை என்றவர்கள்கூட, ஏன் லீலை ஏற்பட்டது என்றும் கூற முடிவதில்லை.

# சிருஷ்டி

பிரம்மத்தை நாம் பரம்பொருள் அல்லது இறைவன் என்கிறோம். இது அனந்தமானது. அனந்தமான இறைவனுக்கு தன் இச்சையாகச் செயல்படும் உரிமையும், திறமையும் உண்டு.

ஆகவே, இறைவன் தன்னில் தானாய் இன்பம் துய்க்க விரும்பினான். அதற்கான விளையாட்டாக ஒளிந்து, மறைந்து விளையாடவும் ஆசைப்பட்டான்.

அவ்வாறு ஒளிந்து, மறைந்து விளையாடுவதும், மறைந்ததை மீண்டும் கண்டு பிடிப்பதும் ஒருவிதமான இன்பம்.

சர்வ வியாபியான பிரம்மம் எங்கு போய் மறைவான்?

அவன் மறைய அவனுக்கு இடமில்லை. ஏனெனில், எங்கும் அவன் ஒருவனே இருக்கிறான். எனவே தன்னுள் தான் மறைவதாக (Self-absorption) முடிவு செய்தான்.

அதனால் ஏற்பட்ட பல மாறுதல்களின் விளைவாக மிக உயர்ந்த ஞானம், அஞ்ஞானமாக மாறியது எனலாம்.

ஆக, சிருஷ்டி என்பது, ஆக்கம், இயக்கம், அந்த இயக்கத்தின் இறுதியாக ஏற்படுகின்ற ஓய்வில் ஒடுக்கம் என முத்தொழில்களையும் அந்த இறைவனே ஒருவனே புரிகின்றான்.

அவ்வாறு அவன் விளையாடும் இந்த விளையாட்டில் **தோன்றி, இயங்கி, மறைந்து** விளையாடுவது என்பது,

ஞானத்திலிருந்து, அஞ்ஞானத்திற்கும், அஞ்ஞானத்திலிருந்து ஞானத்திற்கு வருவதாக, இந்த நூல் மிகவும் அழகாக சுட்டிக் காட்டுகின்றது.

அது எப்படியெனில், அடைந்த அந்த ஞானத்தை மறந்து, அதன் நினைவை இழப்பதும், பிறகு மீண்டும் தன் நினைவு பெறுவதும் என இந்த விளையாட்டு அவனது எண்ணங்களைச் சார்ந்து (Universal Thoughts) மட்டுமே நடைப் பெறுவதாக உள்ளது என்கின்றது.

எனவே, அந்த "**அஞ்ஞானத்தை ருசித்து அனுபவிக்க ஏற்பட்டது இந்த சிருஷ்டி. அதை அனுபவித்தாயிற்று இனி ஞானத்தின் வாயிலாக "நான்" என்ற தன்முனைப்பை இழப்பதும், தன் உண்மை சொரூபத்தை உணர்ந்து சும்மா இருப்பதும்**" என இந்த நூல் நிறைவடைகின்றது.

அதாவது, ஈஸ்வரனின் ஆழ்ந்த உறக்கமான மகா பிரளயத்தின் போது மட்டும்தான் இந்த படைப்பு எண்ணம் நிறுத்தப் படுவதால், இக்காலத்தில் மட்டும்தான் அவனது மனதிற்குச் சற்று ஓய்வு கிடைக்கிறது. ஆனால் இந்த ஓய்வால் என்ன பயன்?

ஈஸ்வரன் மீண்டும் விழித்துக் கொண்ட பிறகு, அவனது எண்ணங்களின் எழுச்சிக்கு ஏற்றவாறு மீண்டும் **ஆக்கம், இயக்கம், ஒடுக்கம்** என்ற இந்த சுழற்சக்கர விளையாட்டு தொடங்கப்படுகின்றது.

ஆகவே, நம்முடைய **தனிமனம்** (வியஸ்டி) என்பது, ஈஸ்வரனின் **பிரபஞ்சமனம்** (சமஸ்டி) என்பதை அறிந்து, '**அவனின்றி ஒரு அணுவும் அசையாது**' என்பதை நன்கு உணர்ந்துக் கொண்டு, ஆசைகளை அறவே விடுத்து, வருவதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனநிலை வரும் பொழுது மட்டும்தான், இதுப் போன்ற சாஸ்திர நூல்களை கற்று, உயர் ஞானத்தின் வாயிலாக, அந்த பரம்பொருளை அறிந்து, அதன் வாயிலாக பூரணமான மன நிறைவை உணர்ந்து, உன்னதமான அந்த ஆனந்தத்தை அடைகின்றான்.

நன்றி!

**என்றும் அன்புடன்,**

**சுவாமி பிரபஞ்சநாதன்.**

# 1. சிருஷ்டியின் தொடக்கம்

நாம் ஏன் பிறந்தோம்? பிறப்பிற்கு முன் எங்கே இருந்தோம்? இந்த தேகம் விட்டதும் எங்கே போகப் போகிறோம்? நமது கடமை என்ன? எதனால் சுக துக்கம் வருகிறது? உண்மையில் நாம் எதை தேடுகிறோம்? என்றெல்லாம் ஆறு அறிவு படைத்த மனித தேகத்தில் இருந்து கொண்டு தான் சிந்திக்க முடியும். வேறு கல், மண், பறவை, விலங்கு, பூச்சி போன்ற தேகத்தில் இருந்துக் கொண்டு இதைப் பற்றியெல்லாம் சிந்திக்கவே முடியாது.

ஆகவே, அரிதிலும், அரிதாக கிடைத்துள்ள இந்த மானுட தேகத்தை வைத்து சிறிது நம்மைப் பற்றி நாம் சிந்திப்போம்.

என்னை தத்துவார்த்தமாக யார் அறிகிறார்களோ அவர்களுக்கே நான் சுலபனாக இருக்கிறேன் என்று கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறிய வாக்கியத்தை முன் வைத்து ப்ரபஞ்ச தத்துவத்தை பற்றி சிறிது சிந்திப்போம்.

அது எப்படி ப்ரபஞ்ச தத்துவத்தை பற்றி அறிந்தால் இறைவனை பற்றி அறிந்ததாகும்? என்று தோன்றுகிறது அல்லவா. வாருங்கள் இந்த ப்ரபஞ்சத்தில் நாமும் கொஞ்சம் பயணிக்கலாம்.

# சிருஷ்டி

இறைவன் படைக்கும் முன் இந்தப் பிரபஞ்சம் நாம ரூபமற்று சுத்த வெளியாய், நிர்க்குணமாய், சின்மாத்திரப் பரப்பிரம்மமாக இருந்தது. அதிலிருந்து பிரமையில் கானல் நீர் எவ்வாறு தோன்றுமோ அது போல் மூலப் பிரகிருதியில் இருந்து மாயை ஒன்று தோன்றியது.

மாயையோடு கூடிய அந்த மூலப் பிரகிருதி வெண்மை, சிகப்பு, கறுப்பு என்னும் மூன்று வித நிறங்களோடு, மூன்று வித குணங்களான **ஸத்வ, ரஜோ, தமஸ்** எனும் சக்திகளாயிற்று.

வேறுவிதமாகவும் கூட கூறலாம். அதாவது வெண்மை நிறம் **மாயா சக்தி**. சிகப்பு நிறம் **அவித்யா சக்தி**. கறுப்பு நிறம் **ஆவரண, விக்ஷேப சக்தி**. இவற்றை முறையே மாயை, அறியாமை (அஞ்ஞானம்), முனைப்பு (அகங்காரம்) எனவும் சொல்லலாம்

மாயா சக்தி சத்துவ குணத்தை முதன்மையாகக் கொண்டு விளங்கும். அதில் பரப்பிரம்மம் பிரதி பலிப்பதினால் தோன்றிய பிரதிபிம்பமே ஈஸ்வரன் என்று கூறப்படும்.

ஈஸ்வரன் அந்த மாயையைத் தன் வசப்படுத்திக் கொண்டு உலகங்கள், யாவையும் **படைத்தல், காத்தல், அழித்தல்** (சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம்) என்னும் முத்தொழில்களையும் இயற்றி வருகின்றான்.

ஸ்ருஷ்டி என்பது இறைவனின் லீலா விநோதம் ஆகும்.

## சிருஷ்டி

அவனே ஸ்ருஷ்டிக்க விரும்புகிறான், ஸ்ருஷ்டிக்கிறான், ஸ்ருஷ்டியாகவும் இருக்கிறான்.

அவனே தான் அதை ரசித்து அனுபவிக்கிறான். ஆகவே தான் ஸ்ருஷ்டி இறைவனின் லீலா விநோதம் என கூறப்பட்டது.

பரப்பிரம்மத்திலிருந்து மாயையும். மாயையில் இருந்து அவித்தை எனப்படும் அறியாமை உண்டாகியது. அந்த அவித்தையிலிருந்து **ஆவரணம், விக்ஷேபம்** என இரண்டு சக்திகள் உண்டாகியது.

அதிலிருந்து அகங்கார ஆற்றலும், அந்த அகங்காரத்திலிருந்து **ரஸம், ரூபம், ஸ்பரிசம், சப்தம், கந்தம்** (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) எனும் பஞ்ச தன் மாத்திரைகளும், அவற்றிலிருந்து, **நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்** (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்) எனும் பஞ்ச பூதங்களும் அந்த. பஞ்ச பூதங்களினால் பிரபஞ்சமும், பிராணிகளும் உண்டாயின.

மாயையினால் உண்டான பிரபஞ்சமும், மாயா சரீரமும் தோன்றி மறைந்து, தோன்றி மறைந்து ஜீவன்களை மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்புகளுக்கு ஆளாக்கிக் கொண்டே வரும்.

முடிவில், எல்லாம் அழிவுறும்.

அதாவது, பிரளய காலத்தில் எல்லா நதிகளும், கடல் நீரிலே உண்டாகிக் கடைசியில் கடலிலே விழுந்து ஒன்றாகக் கலந்து விடுவது போல, பிரம்மா முதல் மனிதர்கள், மிருகங்கள் முதலான சராரச பொருள்களெல்லாம் எந்தப் பரப்பிரம்மத்திலிருந்து உண்டாயினவோ அந்தப் பரப் பிரமத்திலேயே ஒன்று கலந்து ஏகமாய் ஐக்கியமாகிவிடும்.

இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தான் அது ஆகாயத்தில் மந்திரத்தால் வரவழைக்கப்பட்ட. ஒரு நகரம் போன்று, இந்த ப்ரபஞ்சம் நமக்குத் தெரிகிறது.

இந்த குணங்களை அறிய வேண்டுமானால், நாம் நமது **காது, தோல், கண், நாக்கு, மூக்கு** என்ற இந்து ஐந்து ஞானேந்திரியங்களினால் தான் தெரிந்து கொள்கிறோம்.

அப்படியானால் இந்த ஞானேந்திரியங்களால் எவை கிரஹிக்கப்பட வேண்டுமோ, அவைகள் இந்த வெளிப் ப்ரபஞ்சத்தில் இருந்தே ஆக வேண்டும்.

இந்த இந்திரியங்களால் நாம் கிரஹிப்பது முறையே **சப்தம் ஸ்பர்சம் ரூப ரஸம் கந்தம்** ஆகிய ஐந்து விஷயங்களை. எனவே இந்த ஐந்து உணர்ச்சிகளையும் கொடுக்க கூடியதாக ப்ரபஞ்சத்தில் அம்சங்கள் இருந்தாக வேண்டும் அல்லவா?

அந்த அம்சங்களே **ஆகாசம், வாயு, அக்நி, நீர், ப்ருத்வி** என்ற ஐந்து பூதங்கள் எனலாம்.

ஆகையால் ப்ரபஞ்ச தத்துவத்தை சிந்திப்பது என்றால் இந்த ஐந்து பூதங்களையே சிந்திப்பதாக ஆகிறது.

இந்த பஞ்ச பூதங்களின் ஸ்வரூபம் என்ன?

இவைகள் எப்படி ஏற்பட்டன?

எங்கே இருந்து ஏற்பட்டன? என்பதை சிந்திப்போம்.

இவைகளின் உண்மை ஸ்வரூபத்தை நன்கு ஆராயும் போது எல்லாமே ப்ரம்மத்திலிருந்தே உண்டானவை என்பது தெரிகிறது. எனவே இவை ப்ரம்மத்திற்கு வேறானவைகள் அல்ல என்பதும் தெளிவாகிறது.

எனவே இவைகளை பற்றிய விசாரம் ப்ரம்மத்தை அறிய உதவுகின்றது. அது அவசியமும் கூட, எப்படியென்றால், இந்த பஞ்ச பூதங்களை பிரித்து அறியும் போது, அந்த ப்ரம்மம் அறியப்பட்டுவிடக் கூடியதாக இருக்கிறது.

அப்படிப்பட்ட அந்த பிரம்மத்தை அறிய, இந்த மனித உடல் மட்டுமே உண்மையில் சாத்தியமானதும் ஆகும்.

அந்த மனித உடலின் வாசல்கள் 9, ஆன்மதத்துவங்கள் 24, தாதுக்கள் 7, கோசங்கள் 5, குணங்கள் 3, மலங்கள் 3, பிணிகள் அல்லது வியாதிகள் 3, ராகங்கள் அல்லது விகாரங்கள் 8, ஆதாரங்கள் 6, மண்டலங்கள் 3, நாடிகள் 10,

வாயுக்கள் 10, அவத்தைகள் 5, என மொத்தம் **96 தத்துவங்கள்** ஆகும்.

இவைகளில், கண்கள் 2, செவிகள் 2, மூக்குத் துவாரங்கள் 2, வாய் 1, குறி (குய்யம் எனப்படும் ஆண் அல்லது பெண் கருவாய்) 1, மலவாய் (குதம்) 1 என **வாசல்கள் ஒன்பது** ஆகும்.

இத்துடன், பூதங்கள் 5, ஞானேந்திரியங்கள் 5, கர்மேந்திரியங்கள் 5, தன்மாத்திரைகள் 5, அந்தக்கரணங்கள் 4 என மொத்தம் **தத்துவங்கள் இருபத்தினான்கு** ஆகும்.

மேலும், பிருத்வி (பூமி), அப்பு (ஜலம்), தேயு (அக்னி), வாயு (காற்று), ஆகாயம் (விசும்பு) என **பூதங்கள் ஐந்து** ஆகும்.

இந்த பஞ்ச பூதங்கள் ஒவ்வொன்றும் ஸ்தூலமாக உருவாகி, பின் ஒவ்வொன்றும் தனித்தனியே சமஷ்டி, வியஷ்டி, என இரண்டு பாகங்களாகி இரண்டும் சேர்ந்து பத்து பூதங்களாயிற்று.

அதன் ஒருமித்த சமஷ்டி பாகமாகிய பஞ்ச பூதங்கள் "**ப்ரபஞ்சம்**" என்ற ஈஸ்வரன் ஆனது. வியஷ்டி பாகமாகிய பஞ்ச பூதங்கள் "24 **தத்துவங்களாக**" பல்வேறு ஸ்தூல உடல்கள் ஆயின.

இந்த 24 தத்துவங்களால்தான் சீவர்களுக்கு உடல்கள் கிடைக்கிறது.

அது எப்படியெனில் ஒவ்வொரு பஞ்ச பூதத்தையும் **சமஷ்டி, வியஷ்டி** என பிரித்து, அதன் ஒவ்வொரு பிரிவு பூதத்தோடு, மற்ற பூதங்களைச் சேர்க்க 24 தத்துவங்களாக இந்த உடல் கிடைக்கிறது.

பஞ்ச பூதங்கள் என பொதுவாக கூறினாலும் அவைகளுக்குள் ஸ்தூலம் (கண்ணுக்கு தெரிகிற), ஸூக்ஷ்ம (கண்ணுக்கு தெரியாத) என்று இருக்கிறது.

இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான குணங்கள் என்று இருந்தாலும், ஸ்தூலமும், ஸூக்ஷ்மமும் ஒன்றையொன்று சம்பந்தம் உடையவை.

அதாவது ஸ்தூலத்தில், ஸூக்ஷுமத்தின் வ்யாப்தி இருக்கிறது என்பது தெரிகிறது.

உதாரணம் வாசனையை மூக்கு என்ற இந்திரியம் கிரஹிக்கிறது. இதிலே வாசனை என்பது ஸூக்ஷ்மம், மூக்கு என்பது ஸ்தூலம் ஆகும்.

சப்தம் (ஒலி), ஸ்பர்சம் (தொடு உணர்வு), ரூபம் (உருவம்), ரஸம் (ருசி), கந்தம் (வாசனை) என்ற ஐந்தும், பஞ்ச பூதங்களுடைய குணங்கள்.

தெளிவாக கூறினால் இவற்றில் ஆகாசத்தில் **சப்தம்** மாத்திரம் ஒரு குணம் உள்ளது. வாயுவில் **சப்தம், ஸ்பர்சம்** என இரு குணங்கள் உள்ளன.

அக்நியில் **சப்தம், ஸ்பர்சம், ரூபம்,** என்ற முக்குணங்கள் உள்ளன. நீரில் **சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம்** என்ற நான்கு குணங்கள் உள்ளன. ப்ருத்வியில் **சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம்,** கந்தம் என்ற ஐங்குணங்களும் உள்ளன.

அந்த அம்சங்களே ஆகாசம், வாயு, அக்நி, நீர், ப்ருத்வி என்ற ஐந்து பூதங்கள். ஆகையால் ப்ரபஞ்ச தத்துவத்தை சிந்திப்பது என்றால் இந்து பூதங்களையே சிந்திப்பதாக ஆகிறது.

அதாவது ஆகாசத்தில் '**எதிரொலி**' என்ற சப்தமும், வாயுவில் '**விஸ்**' என்ற. சப்தமும், உஷ்ணமும் இல்லாமல், குளுமையும் இல்லாமல் ஸ்பர்சமும், அக்நியில் '**புகு, புகு**' என்ற சப்தமும், உஷ்ணமாக இருக்கும் ஸ்பர்சமும், ப்ரகாசமாக இருக்கும் ரூபமும், நீரில் '**புலு, புலு**' என்ற சப்தமும், குளிர்ந்த ஸ்பர்சமும், வெளுப்பு ரூபமும், தித்திப்பு ரஸமும், பூமியில் '**கடகடா**' என்ற சப்தமும், கடினமான ஸ்பர்சமும், நிலம் முதலான பலவித ரூபங்களும், தித்திப்பு, புளிப்பு முதலான ரஸமும், நல்வாசனை, நாற்றம் என்ற இருவித வாசனையும், பஞ்சபூதங்களின் குணங்களாக, பஞ்சதசி என்ற நூலில் மகான் **வித்யாரண்ய ஸ்வாமிகள்** பிரித்து காட்டுகின்றார்.

சாஸ்திரங்கள் ப்ரபஞ்சத்தில் உள்ள அனைத்து வஸ்த்துக்களையும் ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், ப்ருத்வி ஆகிய ஐந்து வேறு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டே பகுக்கின்றன.

எனவே இந்த ஐந்து ஆதாரத் தத்துவங்களை “**பஞ்ச பூதங்கள்**” என்று அழைக்கப்படுகின்றன.

நாம் காணும் ஆகாயம் உட்பட, பிரபஞ்சம் முழுதும் பரவியிருக்கும் ‘**வெட்டவெளியே**’ இங்கு சிறு ஆகாசத் தத்துவமாகக் குறிப்பிடப்படுகின்றது. அவ்வாறே, நில்லாது இயங்கும் வாயு நிலையையே வாயு தத்துவமாக குறிப்பிடப்படுகின்றது.

வெப்ப சக்தியான அக்நியே அக்நி தத்துவமாக குறிப்பிடப்படுகின்றது. திரவத் தன்மையே நீர்த் தத்துவம் என்று குறிப்பிடப் படுகின்றது. இவை தவிர்த்த தாதுக்கள் அனைத்தின் திடத்தன்மையே ப்ருத்வி தத்துவமாக குறிப்பிடப்படுகின்றது.

ஒவ்வொரு பஞ்ச பூதங்களுக்கும் ஆதார குணம் என்பது அடைப்படையாக உண்டு. அந்த ஆதார குணங்களையே “**தன்மாத்திரைகள்**” என்கின்றோம்.

உதாரணமாக ஆகாசமானது சப்தம் உருவாக ஆதாரமாக மட்டுமின்றி சப்தத்தை கடத்தும், அல்லது தாங்கும்

குணம் கொண்டதாக இருக்கின்றது. ஆகாசத்தின் ஆதார குணத்தினின்றே சப்தம் என்ற விஷயம் விளைகின்றது.

ஆகாசத்தின் இந்த ஆதார குணமே சப்த தன்மாத்திரைகள் எனப்படுகின்றது.

இவ்வாறு ஒவ்வோர் பூதத்திற்கும் உள்ள ஆதார குணங்களாக முன்பு அறிந்த **சப்தம், தொடு உணர்வு, ரூபம், ரஸம், கந்தம்** போன்ற இவைகளையே தன்மாத்திரைகள் எனப்படுகின்றன.

சர்க்கரையில் இனிப்பு போல, அது ஒவ்வொன்றும் நுண்ணிய தனிப்பண்புகள் கொண்டவைகளாக உள்ளன. இவ்வாறு ஒவ்வொரு தன்மாத்திரையும் தனிப்பண்புகளைக் கொண்டுள்ளன.

பொதுவாக உடலுக்கு வெளியே இருக்கும் விஷயங்களை உள்வாங்க உதவுகின்ற கருவிகள் ஆகிய **காது, தோல், கண், நாக்கு, மூக்கு** போன்றவைகளுடன் விஷயங்களை உள் வாங்கும் திறன் பெற்ற **சப்தம், தொடு உணர்வு, ரூபம், ரஸம், கந்தம்** ஆகியன ஒருங்கே “**இந்திரியங்கள்**” என அழைக்கப்படுகின்றன.

உண்மையில் காது தோல் கண் நாக்கு மூக்கு போன்றவைகள் வெறும் உடல் உறுப்புகள் மாத்திரமே. இவைகள் “**கோளகங்கள்**” என்றும் அழைக்கப்படுகின்றன.

பொதுவாக, இந்திரியங்களின் வெறும் கருவிகள் மாத்திரமே. இந்திரியங்கள் என குறிப்பிடுவது, அந்த கோளகங்கள் மற்றும் அவற்றின் இயல்பான விஷயங்களை உள்வாங்கிப் பகுத்தறியும் திறனும் சேர்ந்த ஒரு தொகுப்பே "**இந்திரியங்கள்**" எனப்படுகின்றன.

காதுகள் சப்தத்தையும், தோல் ஸ்பர்சத்தையும், கண்கள் ரூபத்தையும், நாக்கு ருசியையும், மூக்கு வாசனையையும் கிரஹித்து, அந்தந்த விஷயங்களை அறிய உதவுகின்றன.

இவ்வாறு விஷயங்களை குறித்த அறிவை தருவதா,ல் அவைகள் "**ஞானேந்திரியங்கள்**" என்று அழைக்கப்படுகின்றன.

உடலுக்கு வெளியில் இருக்கும் விஷயங்களை உள் வாங்குவதால் இவைகள் புறக்கருவிகளே. இவைகள் அந்தந்த குணங்களை தான் கிரஹிக்கின்றன.

ஏனென்றால், இந்த ஸ்தூல சரீரத்தில் எந்த அம்சம் மூலமாக வேலை செய்கிறதோ, அந்த பெயர்கள் தான் இந்திரியங்களுக்கு சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளை வெறும் சரீர பாகம் என நினைத்து விடக் கூடாது.

அதாவது, இந்த ஸ்தூல சரீர உறுப்புகளைத் தான் நாம் பார்க்க முடியும். இந்திரியங்களோ சூக்ஷ்மம்.

அவைகளுடைய இருப்பை ஒரு அனுமானத்தினாலே தான் அறிந்து கொள்ள முடியும்.

அதாவது காது பார்ப்பதற்கு, அதாவது நம் பார்வைக்கு நன்றாக இருக்கிறதென்றால், அதற்கு கேட்கும் சக்தி நிச்சயம் இருந்தாக வேண்டும் என்ற நியதி இல்லை. ஆனால், அதே காது நன்றாக விஷயங்களை கிரஹிக்குமானால், அந்த காது என்ற இந்திரியம் முழுமையாக நன்றாக இருக்கிறதென்று ஊகித்துக் கொள்ளலாம் அல்லவா?.

இந்த ஞானேந்திரியங்கள் சாதாரணமாக வெளிப்பக்கமே பாய்ந்து ஓடும் (விஷயங்களை தேடும்). ஆனால் சில சமயங்களில் காதைப் பொத்திக் கொண்டாலும் ப்ராண வாயு உடலின் உள்ளே சஞ்சரிப்பதாலும், வயிற்றிலுள்ள அக்னியினாலும் உள்ளே உள்ள சப்தங்கள் கேட்கப்படுகின்றன.

அன்னபானாதிகளை உட்கொள்ளும் போது உள்ளே ஸ்பர்சம் தெரிகிறது. கண்ணை மூடிக்கொண்டால் இருட்டு என்னும் விஷயம் தெரிகிறது. ஏப்பம் அல்லது வாந்தியால் உண்ட அன்னபானாதிகளின் ருசியும், வாசனையும் தெரிகிறது. இதிலிருந்து ஞானேந்திரியங்கள் உள்ளே உள்ள விஷயங்களையும் கிரஹிக்கிறது என்பது ஊர்ஜிதமாகிறது.

வெளியில் இருக்கும் விஷயத்திற்கும், உள்ளே கிரஹிக்கப்படும் விஷயங்களுக்கும் ஒரே அடிப்படை தான் காரணம். அவையவைகள் அததுகளின் குணங்களை மட்டுமே கிரஹிக்கின்றன.

ஆகாசத்தின் குணம் சப்தம் என்றால், காதுகளின் குணம் சப்தத்தை கிரஹிப்பது. இப்போது பாருங்கள் குணங்களே தான் குணங்களை அறிகின்றன.

இதைத்தான் கீதையில் பகவானும் தெளிவாக "**குணா குணேஷு வர்தந்தே**" என்கிறார்.

## 2. ஆவரண சக்தி – விக்ஷேப சக்தி

ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் கண்ணுக்கு புலப்படாமல் இருந்த மூலப்ரக்ருதி வெளிப்பட விருப்பம் கொண்டு ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் மூன்று குணங்களாக வெளிப்பட்டன.

இதில் முதன்மையான சுத்த ஸத்வ குணம் "**மாயை**" எனப்படும்.

இந்த ஸத்வ குணத்தை முதன்மையாக கொண்ட மாயா சகித மூலப்ரக்ருதியே "**ஈஸ்வரன்**" எனப்படுகிறார்.

ரஜோ குணத்தை முதன்மையாக கொண்ட மாயா சகித மூலப்ரக்ருதியே "**ஜீவன்**" எனப்படுகின்றது.

தாமஸ குணத்தை முதன்மையாக கொண்ட மாயா சகித மூலப்ரக்ருதியானது **ஆவரணம் விக்ஷேபம்** என இரண்டாக பிரிந்து நின்றது. ஆவரணம் என்பது மறைக்கும் சக்தி ஆகும். விக்ஷேபம் என்பது தோன்றும் சக்தி ஆகும்.

## ஆவரண சக்தி

மாயையின் ஆவரணம் என்ற மறைக்கும் சக்தி சொல்லில் அடங்காது. அது எவ்வாறு என்றால் மாயையின் விக்ஷேப சக்தியினால் தோன்றுகின்ற ஸ்தூல சரீரத்தையும், ஜீவனையும் நான் என அபிமானிக்கச் செய்து சுத்த சைதன்ய பரமாத்மாவாகவே நான் இருக்கிறேன், அதுவே என் ஸ்வரூபம் என்பதை, ஜீவர்களுக்குத் தெரியவிடாமல் மறைத்து விடுகிறது.

உதாரணத்திற்கு, வெளிச்சம் குறைந்த இடத்தில் உள்ள ஒரு தூணைப் பார்ப்பவன் அதை ஒரு மனிதன் என தவறாக நினைத்து கலங்குவது போலாகும்.

இந்த மதி மயக்கம் எதனால் வந்தது என்றால், ஒருவனது உறக்கத்தில் வரும் கனவைப் போல, அறியாமையினால், உண்மையில் அங்கு மனிதன் இல்லாத போதும் இருப்பதாக தெரிகிறது. இது அறியாமையினால் நிகழ்வது. அறியாமை என்பது தனது உண்மை சொரூபமான ப்ரம்மத்தை அறியாது இருப்பதே ஆகும்.

இந்த உடலைப் பற்றிக் கொண்டு, பொய்யான **நான்** என்ற அகந்தை, அந்த உடலை **தன்னுடையது** என சொந்தம் கொண்டாடுகிறது.

எப்போதும் வெளிப்பக்கமாக ஓடுகின்ற பார்வையை கொண்ட அந்த ஜீவன் (அகந்தையோடு கூடிய), தான் காணும் உலகை உண்மையானது என்றும், தன்னை அதில் இயங்கும்

கர்த்தா என்றும், தன்னை அந்த உலகின் சுக போகங்களை விரும்புகிறவன் என்றும், அதனால் வரும் இன்ப துன்பங்களை அனுபவிப்பவன் என்றும் கருதுகிறது.

இந்த கருத்துக்களை ஆழமாக எண்ணாமல், தனது உண்மை நிலை என்ன என்பதை அடியோடு மறந்து, தான் யார் என்று விசாரம் செய்யாததினால் தன்னை அறியாது இருந்துக் கொண்டு, இந்த பிறப்பு, இறப்புச் சுழலான சம்சார பந்தங்களில் உழன்று கொண்டு இருக்கிறான்.

இந்த ஆவரணம் இரு வழிகளில் தெரிய வருகிறது.

ஒன்றில் அது இல்லை என்றும், மற்றதில் அது தானாக வெளிப்படுவது இல்லை என்றும் உணரப்படுகிறது.

உதாரணம் கொண்டு தான் இதை விளக்க முடியும்.

எப்போதும் விளங்குகின்ற அத்வைத பரமான ப்ரம்மம் ஒன்றே சத்தியம் என்று குரு உபதேசித்தாலும், வேறொன்றுமே இல்லாத ஒரே வஸ்து என்ற ஒன்று எப்படி இருக்க முடியும்? அப்படியொன்றும் இல்லை என சிஷ்யன் நினைத்து குருவாக்கியத்தை மறுக்கிறான்.

ஆவரண சக்தியால் சிஷ்யனுக்கு குரு சொன்னது மறுக்கப்பட்டு, அவனுடைய பழைய எண்ணங்களே அவனுக்கு நிலைத்து நிற்கின்றன. இந்த அலட்சிய மனப்பான்மை தான் ஆவரணத்தின் முதல் தன்மை.

ஒரு சிஷ்யன் பல புத்தகங்களைப் படித்தும், அருளோடு கூடிய பல குருமார்களின் உபதேசங்களைக் கேட்டும், தன்னை அறியாமலேயே அத்வைத பரமான வஸ்து ஒன்று இருக்கிறது என்று எண்ணி முழு நம்பிக்கையோடு அடியெடுத்து வைத்தாலும், அந்தக் கருத்தின் ஆழத்தை உணர முடியாமல், மேலெழுந்தவாரியாக நான் தெரிந்து கொள்ளும் அளவிற்கு வெளிப்படவில்லையே என்று கூறுகிறான்.

அந்த அளவிற்கு அவனுக்கு அறிவு வளர்ந்திருந்தாலும், அறியாமை எனும் முந்தைய மயக்கம் அவனை விட்டு முழுவதுமாக நீங்கவில்லை. இதுவே ஆவரணத்தின் இரண்டாவது தன்மை.

இந்த தன்மைகளை உணர்த்தி அவைகளை போக்கிக் கொள்வதற்காக ஒரு சத்குருநாதரை சரணடைந்து, மந்திரோபதேசம் பெற்று, இறைவனை மந்திர, தந்திர, யந்திர ரூபமாக, ஆவரண பூஜைகளை செய்கிறான்.

அதை இங்கு சிறிது ஒப்பிட்டு சிந்திக்கலாம்.

குரு பாதுகா மந்திரம் சிஷ்யனுக்கு முதலில் உபதேசிக்கப்படுகிறது. குருவின் மகிமைகள் சொல்லிவிட முடியாது.

தன்னையே சரணடைந்து தன்னை ப்ரம்மமாக ஆராதிக்கின்ற, சாதகனுடைய பாவங்களை போக்கி இந்த

சம்சார பந்தத்தில் இருந்து, சாதகனைக் காப்பாற்றி மோக்ஷத்தை அளிப்பதால் குருமந்திரமே பாதுகை ஆகும்.

அனைத்து மறைப்புகளும் நீங்கும் வரை சாதகன் அப்பியாசத்தை தொடர்ந்து செய்ய வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

இதுவே ஆவரண பூஜையாகும்.

பொதுவாக நவாவரண பூஜை ப்ரசித்தி என்பதால், ஒவ்வொரு ஆவரணத்தின் சூக்ஷுமத்தை இனி பார்க்கலாம்.

முதல் ஆவரணத்தில் ப்ரக்ருதி விஷய வ்ருத்திகளை ப்ரதானமாக கொண்ட சித் சக்தி ஆராதிக்கப்படுகிறது. ஜீவனின் ஸ்தூல சரீர அபிமானத்துடன் கூடிய விழிப்பு நிலையையும் ஞானேந்திரியங்களால் உணரப்படுகின்ற விஷயங்களையும் அவற்றால் அடைகின்ற சுக, துக்க அனுபவங்களையும் இது குறிப்பிடுகிறது. இவற்றை உணர்ந்த சாதகன் இந்த வ்ருத்தி விஷயங்களை தர்ப்பணம் கொடுத்து அடுத்த நிலைக்கு செல்கிறான்.

இரண்டாவது ஆவரணத்தில் ஸ்வப்னத்தில் அடங்கி இருக்கும் விஷய வ்ருத்திகளை ப்ரதானமாக கொண்ட சித் சக்தி ஆராதிக்கப்படுகிறது. சாதகன் இங்கு கனவு நிலையையும், சூக்ஷ்ம சரீரத்தையும், அதில் அடையப்படுகின்ற சுக, துக்க அனுபவங்களையும் இது குறிப்பிடுறது.

இவற்றை உணர்ந்த சாதகன் இந்த வ்ருத்தி விஷயங்களை தர்ப்பணம் கொடுத்து, அடுத்த நிலைக்கு செல்கிறான்.

மூன்றாம் ஆவரணத்தில் தினப்ரளயம் எனப்படுகின்ற ஸுஷுப்தியை உபாதியாக கொண்ட சித்சக்தி ஆராதிக்கப் படுகிறது.

ஜீவனது ஆழ்ந்த உறக்க நிலையையும் (ஸுஷுப்தி, காரண சரீரத்தையும், அதில் அடையும் ஆனந்தத்தையும் இது குறிக்கிறது.

இங்கு ப்ரஜ்ஞான கனமாக விளங்கும் சாதகனுடைய பெருமை உணர்த்தப்படுகிறது. காரண சரீரத்திற்கு அதிஷ்டானம் சித் சக்தியே எனும் பாவனை சாதகனுக்கு ஏற்பட்டு தர்ப்பணம் கொடுத்து அடுத்த நிலைக்கு செல்கிறான்.

நான்காம் ஆவரணத்தில் சித் சக்தி சாதகனுக்கு தானாகவோ, அல்லது குருவடிவத்திலோ தோன்றி, ஞானத்தை அருள்கிறது. ஆதி குருவும் ஜகத் காரணருமான சர்வேஸ்வரன் ஈரேழு புவனங்களிலும் விளங்குவதை குறிப்பிடுகிறது.

இந்த விளக்கத்தை காண்பதே சௌபாக்யம் என சாதகன் உணர்ந்து தர்ப்பணம் கொடுத்து அடுத்த நிலைக்கு செல்கிறான்.

சிருஷ்டி

ஐந்தாம் ஆவரணத்தில் சித் சக்தி ஞானத்தை நன்கு விருத்தி செய்கின்ற குருபரம்பரையாக ஆராதிக்கப்படுகிறது.

சத்குருவினால் சாதகனுக்கு கிடைக்கப் போகின்ற ஆத்ம ஞான லாபத்தையும், குருசிஷ்ய பரம்பரையின் முக்கியத்துவத்தையும் அதன் வளர்ச்சியையும் குறிக்கிறது.

அதனால், இதுவே பரம புருஷார்த்தத்தையும் அளிக்கிறது. இங்கு நாம, ரூப வடிவ சர்வ ப்ரஞ்சத்தையும் ஆத்ம ஸ்வரூபத்தில் லயம்செய்யும் ஆற்றலோடு மோக்ஷத்தில் தீவிர நாட்டம் உடையவனாகவும் இருக்கின்ற சாதகன் ஈஸ்வர அனுக்ரஹத்தினால், ஸத்குருவை சர்வேஸ் வரனாக உணர்ந்து, குரு வழிபாட்டை தர்ப்பணம் கொடுத்து பின் அடுத்த நிலைக்கு செல்கிறான்.

ஆறாவது ஆவரணத்தில் சித் சக்தி ஹ்ருதய குகையில் மிகவும் ரகசியமாக இருப்பதாக ஆராதிக்கப்படுகிறது.

சித்தமறியாதபடி சித்தத்தினின்றி லகு, திவ்ய தேஜோமயத்தை சிற்பர வெளிக்குள், வளர் தத்பரமதான பரதேவதையை, அஞ்சலி செய்வாம் என தாயுமானவர் கூறுகிறார்.

ஜீவனைத் தன் உண்மை ஸ்வரூபத்தில் இருக்கச் செய்து மறுபடியும் அவனுக்கு த்வைத பாவனையால் உண்டாகும் பயம் ஏற்படாமல் காக்கிறது.

சிருஷ்டி

யாவராலும் விரும்பப்படுகின்ற அழிவற்ற ஆனந்த சித்தியாக சர்வேஸ்வரனை அந்தர்முகப்பட்ட மனதால் இடை விடாமல் நாடும் சாதகன் தன்னை தர்ப்பணம் கொடுத்து அடுத்த நிலைக்கு செல்கிறான்.

ஏழாம் ஆவரணத்தில் சித் சக்தி ரஹஸ்யமாக ஆராதிக்கப்படுகிறது.

அஞ்ஞானமே அனைத்து ரோகங்களுக்கும் அடிப்படை. ஆகவே அதை நீக்குவதால் ரோகம் நீங்கி சுகம் உண்டாகிறது என்பதையும் அதற்கு சத்குருவினால் உபதேசிக்கப்பட்ட மஹா வாக்கியார்த்தத்தை மனனம் செய்கின்ற மனோவ்ருத்திகளையும் குறிக்கிறது.

மஹாவாக்கியத்தின் லக்ஷியத்தை அறிந்த சாதகன் தான் பாணம், வில், பாசம், அங்குசம் முதலான ஆயுதங்களை ஏந்திய சித் சக்தியே என்ற பாவனையால் ஆயுதங்களை பூஜித்து பின் தர்ப்பணம் கொடுத்து அடுத்த நிலைக்குச் செல்கிறான்.

இதில் பாணம் என்பது பஞ்ச தன்மாத்திரைகளையும், வில் என்பது மனத்தையும், பாசம் விருப்பையும், அங்குசம் மதம் மற்றும் வெறுப்பதையும் குறிக்கிறது.

இந்த ஆயுத அர்ச்சனத்தில் ஆத்ம சாக்ஷாத் காரத்திற்கான தடைகள் நீங்குகின்றன. அனாத்ம விஷயத்தில் வைராக்கியமே ஆயுதம் ஆகும்.

எட்டாவது ஆவரணத்தில் சித் சக்தி நாதமாக அதிரஹஸ்யமாக ஆராதிக்கப்படுகிறது. நிதித்யாஸனத்தினால் சர்வசித்தியாகிய ஜீவ ப்ரம்ம ஐக்கியம் ஏற்படுகிறது.

சித் சக்தியின் விருப்பத்தினாலேயே எல்லாம் உண்டாயின என்ற அனுபவம் உண்டாகி, அந்த சித் சக்தியே அனைத்திற்கும் பீஜம் என்ற ஞானத்தை சாதகன் அடைந்து த்ரிபுடியை சித்சக்திக்கு தர்ப்பணம் கொடுத்து அடுத்த நிலைக்கு செல்கிறான்.

ஒன்பதாவது ஆவரணத்தில் சித் சக்தி பிந்துவாக ஆராதிக்கப்படுகிறது. இது மனதிற்கும், வாக்கிற்கும் எட்டாததாக ஆனந்தமே வடிவாக இருக்கிறது.

இது ஜீவ ப்ரம்ம ஐக்கியத்தால் ஏற்படும் பரமானந்தத்தை குறிக்கிறது.

எல்லா மந்திரங்களும், எல்லா மனோ நிலைகளாகிய பீடங்களும், எல்லா யோகங்களும், எல்லா சித்திகளும் ஒடுங்கும் இடம் இதுவே.

அகண்ட வெளியான தன் ஸ்வரூபத்தில் ப்ரபஞ்சத்தை ஓர் சித்திரம் போல் காணப்படுவதான ஜீவன் முக்தி நிலை இதுவே.

அதன் பிறகு செய்கின்ற பஞ்ச **பஞ்சிகா பூஜை** சவிகல்ப சமாதிக்கு மேலுள்ள நிலைகளை குறிப்பதாக அமைகிறது.

இந்த ஆவரண பூஜையின் தத்துவங்களை பார்த்தீர்களேயானால், விசாரத்தின் மூலமாகவே அறியாமை நீக்கப்பட்டு ஞானயோகம் சாதகமாகும் என்து தெளிவாகிறது.

நான் இந்த பீஜமே என்ற அனுபவம் வருகிற வரையில் விசாரம் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்பது உணர்த்தப்பட்டது.

சத்குருவினால் தான் அதற்கு வழி காட்ட முடியும் என்பதும் நிலை நிறுத்தப்பட்டது. மாயையின் ஆவரண சக்தியின் மறைக்கும் தன்மையும் அதை சாதகன் கடக்கும் வழிமுறைகள் இங்கு விளக்கப்பட்டன.

## <u>விக்ஷேப சக்தி</u>

ஆத்மாவானது பூரணமாகவும், நிலையானதாகவும், இரண்டற்றதாகவும், அறிவு ஸ்வரூபமாகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதுவே எல்லாவற்றையும் வியாபித்துக் கொண்டும் இருக்கிறது. இந்த தமோரூபமாக இருக்கின்ற ஆவரண சக்தியானது சூரியனை பூமி, சந்திரன் மறைப்பது போல ஆத்மாவை நன்கு மறைத்துக் கொண்டிருக்கிறது.

தமோ குணத்தில் உறுதியுள்ள **விக்ஷேபம்** என்ற பெயருடைய சக்தியானது, இந்த புருஷனை ஆசை, கோபம் முதலான பந்தப்படுத்தும் குணங்களால் மிகவும் துயரப்படுத்துகிறது.

தூய்மையான, அறிவு ஸ்வரூபமான தன்னுடைய ஆத்ம ஸ்வரூபம் மறைக்கப்பட்டவுடன், மனிதன் ஆத்மாவல்லாததை மோகத்தினால் “**நான்**” என்று எண்ண வைக்கிறது.

இந்த இரண்டு சக்திகளினால்தான் மனிதனுக்கு பந்தம் வந்திருக்கிறது. இவன் இவைகளால் விசேஷமான மோகத்தை அடைந்து சரீரத்தை ஆத்மாவாக நினைத்து மயங்கி, அலைந்து கொண்டு இருக்கிறான். அந்த தோற்றத்தை எவ்வாறு உருவானது என பார்க்கலாம்.

தோன்றும் சக்தியான இந்த விக்ஷேபத்தினால் மிகவும் நுண்ணியதான சூக்ஷ்ம ஆகாசமும், அந்த சூக்ஷ்ம ஆகாசத்தில் இருந்து சூக்ஷ்ம வாயுவும், அந்த சூக்ஷ்ம வாயுவில் இருந்து

சூக்ஷ்ம அக்நியும், அந்த சூக்ஷ்ம அக்நியில் இருந்து சூக்ஷ்ம நீரும், அந்த சூக்ஷ்ம நீரில் இருந்து சூக்ஷ்ம ப்ருத்வியும் உண்டாயின. இவ்வாறு பஞ்ச பூதங்கள் உருவாயிற்று.

இந்த சூக்ஷ்ம பஞ்சபூதங்களின் குணங்களே பஞ்ச தன்மாத்திரைகள் (சப்தம் தொடு உணர்வு ரூபம் ரஸம் கந்தம்).

இப்படியாக தோன்றிய பஞ்ச பூதங்களின் ஸத்வ அம்சத்தில் இருந்தே ஞானேந்திரியங்கள் (காது, தோல், கண், நாக்கு, மூக்கு) மற்றும் அந்தக்கரணங்களும் (மனம், புத்தி, சித்தம், அஹங்காரபம்) தோன்றின.

பஞ்ச பூதங்களின் ரஜோ குண அம்சத்தில் கர்மேந்திரி யங்கள் (வாய், கை, கால், எருவாய், கருவாய்) மற்றும் பஞ்ச வாயுக்களும் (ப்ராணன், அபானன், வ்யானன், உதானன், சமானன்) இவற்றின் உப வாயுக்களும் (நாகன், கூர்மன், கிருஹரன், தேவதத்தன், தனஞ்செயன்) தோன்றின.

பஞ்ச பூதங்களின் தமோ குண அம்சத்தில் பஞ்ச பூதங்களையும் பஞ்சீகரித்ததால், ஸ்தூல ஆகாயம், ஸ்தூல வாயு, ஸ்தூல அக்நி, ஸ்தூல நீர், ஸ்தூல ப்ருத்வியும் உண்டாயின.

இந்த ஸ்தூல பஞ்ச மஹா பூதங்களினால் அனைத்து ஜீவர்களின் ஸ்தூல சரீரங்களும், அண்ட சராசரமும் நாம் காணும் இந்த உலகமும், இந்த உலகத்தில் போகங்களும் உண்டாயின.

ஆனால், இங்கு ஆவரணம் என்ற அறியாமை சக்தியினாலே, கயிற்றில் பாம்பை ஏற்றி வைத்துக் கொண்டு, அந்த கயிற்றை பாம்பாக நினைப்பது போல, பரிபூரணமாக விளங்கும் சுத்த சைதன்ய ப்ரம்மத்தில், விக்ஷேபம் என்ற தோற்றத்தின் காரணமாக, இந்த அழியக்கூடிய ஸ்தூல தேகங்களை "**நான்**" என்று அபிமானிக்கின்ற இந்த ஜீவர்களுக்கு, முக்குணங்களான **சத்வ, ரஜோ, தம** குணங்களின் சூக்ஷ்ம கூறுகளே ப்ரபஞ்ச உற்பத்திக்கு காரணமாயின.

சுருங்கக் கூறினால், வெளிப்படாத மாயை என்பது, இங்கு மனம் என்ற வடிவில் வெளிப்படுகின்றது.

மறைந்திருக்கும் பொருளோடு கூடிய மனம் பலப்பல வடிவங்களும், பெயர்களையும் கொண்ட உலகத்தை வெளியே கொண்டு வருகிறது.

ஸ்ருஷ்டி முழுவதிலும், இந்த **ஸத்வ, ரஜ, தமஸ்** என்ற மூன்று குணங்கள் அடிப்படையாகவே இருக்கின்றன.

இந்த குணங்களே எல்லாவற்றிலும் சூக்ஷுமமாக விளங்குகிறது. இந்த அடிப்படை தன்மைகளுக்கு ஏற்றார்போல, ஒவ்வொன்றிடம் இருந்தும் அதிர்வலைகள் வெளிப்பட்டு, ஒவ்வொன்றின் நடத்தையும் அதற்கேற்றாற்போல அமைகிறது.

இப்பொழுது இந்த விக்ஷேபத்தினால் எப்படி தோற்றம் வருகிறது என்பதை பார்த்தாகிவிட்டது.

இனி, இந்த தோற்றம் ஜீவனை எப்படி மறைக்கிறது? என்பதை பார்ப்போம்.

விக்ஷேபமென்பது மனதையும், புத்தியையும் சுண்டி விடுவதன் மூலம் ஒரு உண்மையைப் பலவாக உணரச்செய்து, வெளி உலகத்துடன் தொடர்பு ஏற்படுத்துகிறது.

அது எப்படியெனில், ரஜோ குணம் அல்லது ஆசைகளின் மேலீட்டினால் அலைக்கழிக்கப்படும் மனம், ஐம்புலன்களில் ஏதாவது ஒன்றுடன் அல்லது பலவற்றுடன் சேர்ந்து, வெளியுலகப் பொருள்களுடன் தொடர்பு கொள்கிறது.

இவ்வாறு சலனப்பட்ட மனோநிலையே '**விக்ஷேபம்**' எனப்படுகிறது.

பொதுவாக நாம் "**நான்**" என்று சொல்லும் போது ஆத்மாவையும், அனாத்மாவையும் சேர்த்துத் தான் சொல்கின்றோம்.

ஆத்மா என்பது சுத்த சைதன்யம். அது எல்லாவற்றையும் அறிகின்ற சக்தி படைத்த அறிவு ஸ்வரூபம். அனாத்மா என்பது அறியப்படுவதாக இருக்கின்றவைகள்.

நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றதும், அறியப் படுவதாக இருக்கின்ற உடலும், மனமும் அனாத்மாவாகும்.

அதாவது அறிகிறேன், கண்டேன் என கூறுவதற்கு அது ஸ்தூலமாக காட்சிமைப்படுத்த முடியாது. எதுவொன்று உடலுக்குள் இருந்து கொண்டு, அனைத்தையும் அறிபவனாக இருக்கின்றதோ அதுவே ஆத்மாவாகும்.

இந்த ஸ்தூல சரீரமானது பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஸ்தூலமாக ஐந்து பூதங்களிலிருந்து முற்பிறவியில் செய்து பாவ - புண்ணிய ரூபமான கர்மபலனால் தோன்றியது.

அதுவே ஜீவனுக்கு போகங்களை, சுக - துக்கங்களை அனுபவிப்பதற்கான இருப்பிடமாக இருக்கிறது.

ஸ்தூலமான பொருட்களில் அனுபவம் வருகின்ற காரணத்தால் அந்த ஸ்தூல சரீரத்திற்கு ஏற்பட்ட நிலையே விழிப்பு நிலையாகும்.

எதையாவது இருக்கின்றது என்று சொல்ல வேண்டுமெனில், அது எப்போதும் இருந்து கொண்டு இருக்க வேண்டும். எந்தக் காலத்திலும் இல்லாமல் போகக்கூடாது.

இந்த மாயை ஆத்ம ஞானம் வந்தவுடன் இல்லாமல் போய்விடுவதால், இது இருக்கிற வஸ்துவாகவும் இல்லை, இல்லாத வஸ்துவாகவும் இல்லை. இந்தத் தன்மையையே "**மித்யா**" என்று அழைக்கப்படுகிறது.

மாயை இருக்கிற வஸ்துவாகவும் இல்லை, இல்லாததாகவும் இல்லை. இரண்டு விதமான ஸ்வபாவ முள்ளதாகவும் இல்லை.

மேலும் பிரம்மத்திற்கு வேறாகவோ, அந்நிய மானதாகவோ, இருவித தன்மையும் உடையதாகவோ கூற முடியாது.

இதற்கு அவயவங்கள் உள்ளது என்றோ, அவயவங்கள் அற்றது என்றும் கூறமுடியாது.

அவயவங்கள் உள்ளதாகவும், இல்லாததாகவும் ஒரே வஸ்து இருக்க முடியாததனால், இருவித தன்மைகள் உடையது என்றும் கூறமுடியாது.

இது மிகப்பெரிய ஆச்சரியமான வஸ்து. இவ்விதமானது என்று எடுத்துச் சொல்ல முடியாத ஸ்வரூபத்தை உடையது.

இந்த மாயை வெளித்தோற்றத்திற்கு வராததும், மூன்று குணங்களுடன் கூடியதாகவும் இருப்பதாக ஏற்கனவே கூறப்பட்டது.

இதுதான் ஆத்மாவிற்கு **காரண சரீரம்** என்று அழைக்கப்படுகிறது.

இதற்கு தனிப்பட்ட அனுபவம், தனிப்பட்ட நிலை என்று கூறுவது ஆழ்ந்த உறக்கம். இந்த நிலையில் அனைத்து

இந்திரியங்களும், புத்தி, மனமும் அதில் உள்ள எண்ணங்களும் ஆத்மாவில் **லயம்** அடைந்து இருக்கின்றன.

அதாவது மயில் தோகையின் பிரமிப்பைத் தருகின்ற வண்ணங்கள் அதன் முட்டையின் கருவில் எவ்வாறு புலப்படாமல் மறைந்து இருக்கிறதோ, அதுபோல அல்லது பெரியதாக பரந்து விரிந்து வளரப் போகும் ஓர் ஆலமரம், அதன் விதையில் புலப்படாமல் மறைந்து இருக்கிறதோ, அதே போலவே பலவிதமான சக்திகள் அனைத்தும் அதற்கும் வேறு என்று இல்லாத ஒரே பொருளான ப்ரம்மத்தில் மறைந்து இருக்கின்றன.

மரம், செடி, கொடிகளின் விதைகள் எல்லாமே மண்ணில் புதைந்து காணப்பட்டாலும், மண்ணின் தன்மை தட்பவெப்பம் மற்றும் பருவ காலத்திற்கு ஏற்ப சிலது சீக்கிரமாக முளைத்தும், சிலது தாமதமாகவும் உண்டாகின்றன அல்லவா. அது போல எந்த சக்திக்கு எப்போது வெளிப் படுவதற்கான சூழ்நிலை உருவாகிறதோ அவைகள் அப்போது தான் வெளிப்படும்.

அந்த சமயத்தில் மாயையின் ஆதாரமான ப்ரம்மம் நினைவாற்றலோடு கூடி, மனம் எனும் சக்தியாக வெளிப் படுகிறது.

இவ்வாறு எப்போதும் மறைந்தே இருக்கும் மாயை அனைத்திற்கும் அடிப்படையான ப்ரம்மத்தில் இருந்து மனமாக வெளிப்படுகிறது.

அவ்வாறு வெளிப்பட்ட மனம் பலவிதமான நாம, ரூப தோற்றங்களை உடைய பொருட்களை உள்ளடக்கிய உலகங்களை சிருஷ்டிக்கிறது என **யோகவாஸிஷ்டம்** கூறுகிறது.

இந்த அனாத்மாவிடத்தில் (நாம, ரூப ப்ரவ்ருத்தி) வைக்கின்ற **நான்** என்கின்ற எண்ணம்தான் **பந்தம்** என்று கூறப்படுகிறது.

சுத்த சைதன்யமே நான் என்பதை மறைத்து, அதன் மேல் ஏற்றிவைத்து காணப்படுகின்ற சரீர, நாம, ரூப அபிமானங்களை வளர்த்துக் கொண்டு, இந்த ஜீவன் (மனம்) பிறப்பு, இறப்பு துயரங்களை அனுபவிக்கிறது.

கர்ம பலன்களை அனுபவிப்பதற்காக தான் அக்ஞானம் இருந்து கொண்டு இருக்கிறது.

சரீரத்தோடும், மனதோடும் ஜீவன் (மனம்) தன்னை சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்ட **'நான்'** என்ற புத்தி தான் அக்ஞானம் ஆகும்.

இதனால் ஜீவன் பொய்யான இந்த சரீரத்தை உண்மை யென்று நம்பி, **அதுவே நான்** என்ற எண்ணத்துடன் சரீரத்திற்கு உணவைக் கொடுத்து வளர்த்துக் கொண்டும், நீரால் குளிப்பாட்டியும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறான்.

எப்படி நூலால் கூடு கட்டும் பூச்சியானது, தான் கட்டிய அந்த நூல் கூட்டுக்குள்ளே அகப்பட்டுக் கொண்டு வெளியில்

வரமுடியாமல் மடிகிறதோ, அது போல சப்தம், தொடுதல், போன்ற உலக விஷயங்களை தானே ஏற்படுத்திக் கொன்டு அவைகளாலேயே தன்னை பந்தப்படுத்திக் கொள்கிறான்.

எவ்வாறு குடிபோதையில் தள்ளாடுபவன் தன்னை வேறு ஒருவனாக உணர்வானோ, எவ்வாறு பைத்தியக்காரன் சம்பந்தமில்லாமல் எதையாவது உளறிக் கொண்டே இருப்பானோ, அதேபோல் சாட்சியாக விளங்கும் ப்ரம்மம் எந்த மாற்றமும் காணாமல், எதனாலும் பாதிக்கப்படாமல் இருந்தாலும், நான் என்ற அஹந்தை பேயினுடைய தாக்கத்தின் பிடியில் இருப்பவன் தன்னை வேறாக பாவித்து மாயத் தோற்றத்தில் மயங்கி அதில் தன்னை இழக்கிறான்.

இந்த விக்ஷேபமானது எப்படி ஆத்மனை மறைக்கிறது என்பதைக் காணும் போது, இது எல்லாம் மாயையின் வலிமையே ஆகும்.

இந்த பந்தம் அக்ஞானத்தினால் ஏற்பட்டது என்பதால், அது விலகினால் தான் பந்தமும் விலகும் என்று தெரிகிறது.

அக்ஞானம் ஞானத்தினால் தான் நீங்கும்.

ஆகவே ஞானத்தால்தான் அக்ஞான மூலமான பந்தம் நீங்கிவிடுகிறது. இதனால் பந்தம் பொய்யென்று தெரிகிறது

சம்சாரமான மரத்திற்கு அக்ஞானம்தான் **விதை**, இந்த அஞ்ஞானத்தினைக் கொண்டு மரம் வளர வேண்டுமானால்,

அதற்கு கர்ம பலன்கள்தான் நீர், இந்த **கர்ம பலனைக்** கொண்டு உண்டான மரத்தின் உடல்தான் **நான்** என்கின்ற எண்ணம். இந்த உடலின் மீது வைக்கும் பற்றினால் தான் **ஆசை** என்கின்ற துளிர் உண்டாகின்றது.

இத்தகைய உடலோடு அபிமானம் வைப்பதனால் உண்டாகின்ற ஆசையினால் தூண்டப்பட்டு, செய்யும் செயல்களினால் வருகின்ற பாவ, புண்ணியங்கள்தான் சீவனை செயலில் ஈடுபடுத்துகின்றன.

சாஸ்திரம் தான் பிரமாணம் என்ற சத்குருவின் வாக்கில் நம்பிக்கையோடும், நித்யாநித்ய விவேகமும், ஆத்ம ஞானத்தில் தீவிர வைராக்யமும், கொண்ட ஜீவனுக்கு அதனால் மனம் நன்கு தெளிவையும் தூய்மையையும் அடையும்.

தூய்மையான மனதை அடைந்தவன் ஞானயோக வழியை பின்பற்றினால் உத்தமமான பரமாத்மாவைப் பற்றிய அறிவை அடைந்து விடுவான்.

ஞானத்தினால் அவன் தன்னை சுத்த சைதன்யமாக உணர்ந்த க்ஷணமே சம்சாரமும் அதற்கு காரணமான அக்ஞானமும் நாசமடைந்து விடுகின்றது.

ஆத்ம ஞானத்தினால் அறியாமையின் இரு சக்திகளான ஆவரணமும், விக்ஷேபமும் அழிபடும் போது, ஒட்டுமொத்த அறியாமையும் அழிந்து போகின்றது.

ஜீவன், விக்ஷேபம் அற்றுப் போனதாலும், ஆவரணம் அழிந்து போனதாலும், ஆத்மாவை பிரதிபலிக்கும் புத்தியானது சாத்வீகமாகிறது. அதாவது முழுதும் சத்வமாக மாறுகிறது. அந்த குணத்திலே ஆத்மா (சைதன்யம்) எவ்விதத் தடையுமின்றி சலனமற்று ஒளிர்கிறது

விக்ஷேபம் முற்றிலும் போவதற்கும், ஏகாக்ரதை வருவதற்கும், இடையில் எந்த நிலையும் இல்லை.

சூரியன் உதிக்க, இருட்டு அகலுவது போல, சித்தமானது எண்ணங்கள் அற்ற வழியில் பெருக்கு ஏற்படும் போது, முன்னிருந்த அறியாமை நிலை போய் இன்னும் மேலான அறிவு நிலைக்கு வருகின்றது.

சித்தை (அறிவை) அறிய '**சித்த விருத்தி நிரோதம்**' உண்டாக வேண்டும் என்பதை பதஞ்சலி மகரிஷியின் **யோக சூத்திரம்** என்ற நூல் மிக ஆழமாக வலியுறுத்துகின்றது. அதாவது **நிரோத:** என்ற சமஸ்க்ருத மொழியில் கூறப்படுவதற்கு தமிழ் மொழியில் **தடைகளை உண்டாக்குக** என்ற பொருளில், ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களை வெளிப்படுத்தாமல், இறக்கி வைத்து செயல்பாடுகள் இன்றி தடுத்தல் என்பதாக இங்கு அறிவுறுத்தப்படுகின்றது.

# 3. மூன்று விதமான குணங்கள்

சத்வ, ரஜஸ், தமோ குணங்களால் ப்ரகிருதி தேவ, மனுஷ்ய, பசு, பக்ஷி ரூபங்களைப் பெற்று ஆத்மாவைப் பிணிக்கிறது. ப்ரகிருதியோ ஈஸ்வரனை சார்ந்திருக்கிறது.

குண ஸ்வரூபம் அல்லாத அவனை குணம் எப்படிப் பிணிக்க முடியும்? என்ற சந்தேகம் வருகிறது அல்லவா. அதாவது பிணிக்கப்படாத ஆத்மா அக்ஞானத்தால் பிணிக்கப்பட்டது போன்று தென்படுகிறது.

அதாவது நீர் அசைவதால் நீரில் தெரியும் சூரிய பிம்பமும் சேர்ந்தே அசைகிறது. சூரியனே அசைவது போன்ற பிரமை, நீரின் பிம்பத்தினின்று தெரிகிறது.

ஆனால், உண்மையில் சூரியன் அசைவதில்லை. அங்கு நீர்தான் அசைகின்றது. அவ்வாறே, கட்டுப்படாத ஆத்மா கட்டுப்பட்டது போன்ற பிரமையை இந்த குணபேதங்களால் ஏற்படுத்துகின்றது.

அவற்றுள் சத்வம் மனிதனுக்கு ஞானவொளியையும் நன்மார்க்கத்தில் விருப்பத்தையும் அளிக்கிறது.

ரஜஸ் ஆசைகள், பற்றுதல் முதலிய குணங்களை அளித்து கர்மங்களில் ஈடுபடுத்தச் செய்கிறது.

தமஸோ மயக்கம், சோம்பல், உறக்கம் முதலியவற்றை அளிக்கிறது.

இவற்றுள் ஏதாவது ஒன்று மற்றவற்றை மிஞ்சியதாகவே இருக்கும். அதாவது இம்மூன்று குணங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயங்களில் தலையெடுத்து முனைப்பாக நிற்கும். அப்போது மனிதனுக்கு அதற்கேற்ற குணங்கள் உதிக்கின்றன. இந்த குணங்களே ஜீவனை வழிநடத்திச் செல்கிறது.

பரிபூரண ப்ரம்மத்தை அறிய வேண்டுமென்றால், இந்த குணங்களை நன்கு அறிந்து விசாரம் செய்வதின் மூலம் ஒவ்வோர் குணமாக நீக்க வேண்டும்.

இதற்கு விசாரமே சிறந்த சாதனம்.

இவ்வாறு விசாரம் செய்து, ஆணவம், கர்மம் பின் மாயையில் இருந்தும் விடுபட்டு ப்ரம்ம நிலையை அடையலாம். இந்த மூன்று குண பேதங்களால் உண்டாகின்ற பந்தங்களே, ஜீவன் பல பிறவிகள் எடுப்பதற்குக் காரணமாக அமைகிறது என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

எனவே இந்த மூன்று குணங்களின் இயல்பு என்ன?

நாம் எந்த குணங்களின் பிடியில் இருக்கிறோம்?

அந்த பிடியில் இருந்து எவ்வாறு விடுபடுவது?

குணங்களின் பிடியில் இருந்து பூரணமாக. விடுபட்ட பின் எந்த நிலையில் எப்படி இருப்பது? என்றெல்லாம் விசாரம் செய்யவேண்டும்.

இந்த விசாரம் தான் ஞானத்திற்கு நேரிடையாக உதவி செய்கிறது. ஆகையால் விசாரத்தை ஞானயோகத்திற்கான சாதனமாக கொள்ள வேண்டும்.

பிரம்ம ஞானம் அடைந்தவர்க்கு மேலும் அடைய வேண்டியது ஒன்றுமில்லை. மனது பரிபக்குவம் அடைந்த வர்களுக்கு ஞான சாதனம் (விசாரம்) மிக எளியது. ஆனால், பக்குவம் அடையாதவர்களுக்கு அது மிகமிகக் கடினமானது.

பிரம்ம ஞானம் அடைந்தவர்கள் நிறைநிலை எய்துகின்றனர்.

இந்த ஸ்தூல உடலத்தைத் துறந்தபிறகு அவர்கள் பரிபூரணமாகிய பரவெளியில் இரண்டறக் கலக்கின்றனர்.

ப்ரம்ம ஸ்வரூவமானது ப்ரகிருதி மயமான தோற்றம், இயக்கம், ஒடுக்கம் என எல்லாவற்றையும் கடந்திருப்பதால், அதை அடைகின்ற ஜீவனுக்கு பிறப்பு, இறப்பு, பிணி முதலியன கிடையாது.

வேகவைத்த நெல்லைப் பூமியில் விதைத்தால் அது எப்படி மீண்டும் முளைக்காதோ, அதுப்போல சித்தை அறிந்து, சித்தத்தை துறந்து, சித்தனான ஒருவன் இறப்பானேயானால் அவனுக்கு மறுஜென்மம் என்பது கிடையாது.

மாயா சகித ப்ரகிருதி முக்குணமாக உள்ளது.

சராசரம் அனைத்துக்கும் அது உபாதான காரணம். காரியமாகப் பரிணமித்துள்ள அனைத்துமாகவும் அவைகளுக்கு அப்பால் இன்னும் தோன்றா நிலையிலும் அது இருக்கிறது.

எங்கும் வியாபிக்கும் தன்மை அதனிடத்துள்ளது.

பூமியில் விதையை நடுகிறோம் என்றால் இங்கு பூமி யோனியாக இருக்கிறது. விதை கர்ப்பமாகப் பரிணமிக்கிறது.

அதாவது, சிசு உண்டாவதில் பெண் பால் **ப்ரகிருதி தத்துவமாகவும்,** ஆண்பால் **புருஷ தத்துவமாகவும்** காட்டப் படுகின்றது.

உருவம் முதலிய பண்புகள் ஒரு பொருளைச் சார்ந்திருப்பது போன்று, குணம் என்ற பண்பு ப்ரகிருதி சொரூபமாகிய குணியைச் சார்ந்திருக்கிறது என்று எண்ண முடியாது.

எவ்வாறு என்றால் அக்கினியும் அதன் உஷ்ணமும் வேறானவைகள் அல்ல. ஒன்றே ஆகும். அவ்வாறே ப்ரகிருதியும், குணமும் ஒன்றே.

முக்குணங்கள் என்பதும், ப்ரகிருதி என்பதும் ஸ்வரூபத்தில் ஒன்றே. இந்த முக்குணங்களை முப்பாழ் என்றும் சொல்லுவதும் உண்டு.



**<u>சத்வ குணம்</u>**

இது முக்குணங்களில் முதன்மையானது.

சத்வ குணமானது நற்காரியங்களில் மனதைச் செலுத்தும். மன அடக்கம் (சமம்), புலன் அடக்கம் (தமம்), துன்பங்களை பொறுத்துக்கொள்ளும் இயல்பு (சகிப்புத்தன்மை), விவேகம், வைராக்கியம், தவம், வாய்மை கருணை, அகிம்சை, மகிழ்ச்சி, நம்பிக்கை, பாவம் செய்வதில் கூச்சப்படுதல் (லஜ்ஜை), மனத்திருப்தி, மனத்தூய்மை, தன்னிறைவு, பணிவு

மற்றும் எளிமைத் தன்மை ஆகிய இயல்புகளை கொண்டிருக்கும்.

தர்மச்செயல்கள், தன் செயல்களை பகவானுக்கு அர்ப்பணம் செய்து விடுவது, பலனில் ஆசையில்லாமல் செயல்கள் செய்வது சத்வ குணத்தின் சிறப்பான பலன்கள் ஆகும்.

சத்வ குணம் உடையவன் தெய்வத்தன்மையையும், பற்றற்ற நிலையையும், விழிப்பு நிலையையும் அடைகிறான். அதன் நிர்மலமான தன்மையால் ஒளிகொண்டது.

தூயதாக இருக்கும் கண்ணாடி ஒன்றோடு சத்வ குணத்தை ஒப்பிடலாம்.

அழுக்குப் படியாத ஸ்படிகம் போன்று அமைந்த அந்த தூய கண்ணாடியின் வாயிலாக வெளிச்சம் நன்கு வெளியாகும். சத்துவகுணம் அங்ஙனம் ஆத்மப் பிரகாசத்தை விளக்குகிறது.

அந்த கண்ணாடி காட்சியை இடர்ப்படுத்தாமல் உள்ளபடி அதன் வாயிலாக விளக்குகிறது. அவைகளை உள்ளபடி கண்டறிவது ஞானம்.

புறப் பொருள்களைப் பார்த்து அறியும் போது அவைகள் தரும் இன்பத்தில் நாட்டம் வருகிறது. சுகத்தை அனுபவிப்பதற்கு ஏற்றவாறு அதில் பற்றுதல் உண்டாகிறது. இன்னும் அதிக சுகத்தைப் புறப்பொருள்கள் எப்படித் தரும்

என்ற ஆராய்ச்சி மேலும் அந்த விஷயத்திற்கான ஞானப்பற்றை வளர்க்கிறது.

புற உலகத்தைப் பற்றிய ஞானமும், அதனிடத்திருந்து பெறும் சுகமும், ஒன்றோடு ஒன்று சம்பந்தம் கொண்டவை. ஆதலால் சத்வ குணம் ஓங்கப்பெற்றுள்ள ஒருவன் மனதை நிவிருத்தியிலே (எண்ணங்கள் அற்ற நிலையிலே) திருப்புவா னாகில் அவனுக்கு சுகப்பற்றும், ப்ரகிருதியின் ஞானப் பற்றும் ஏராளமாக உண்டாகின்றன.

மற்ற பந்தங்களை எல்லாம் விட சத்வ குணம் உண்டு செய்கின்ற பந்தம் மிகவும் வலிமை வாய்ந்தது. அந்த பந்தத்தை உடைத்து எறிவது மிகக் கஷ்டமானது.

ஏனென்றால் ஆத்மானந்தத்துக்கு ஒப்பான சுகத்தை அது கொடுக்கிறது; நுண்ணறிவையும் அது வளர்க்கிறது. சுகத்துக்கும், அறிவுக்கும் அப்பால் செல்ல எந்த மனிதனுக்கு விருப்பம் வருவதில்லை.

இந்த உடம்பில் எல்லா வாயில்களிலும் **ஞான ஒளி** பிறந்தால், அப்போது சத்வ குணம் வளர்ச்சி பெற்றது என அறியலாம்.

அதாவது பல வர்ணங்களோடு கூடிய கண்ணாடிகளால் செய்த பெட்டி ஒன்றில், தீபம் வைத்தால் எப்படி எல்லாக் கண்ணாடிகள் வாயிலாகவும், அதன் வெளிச்சம் வெளியாகுமோ தீபத்தின் பிரகாசத்திற்கு ஏற்ப வெளிச்சமும் அதிகரிக்குமோ,

அதுப்போல, மனிதனுடைய பெட்டி போன்ற இந்த ஸ்தூல உடலில் கண், காது, வாய், மூக்கு, மெய் ஆகிய இந்திரியங்கள் வாயிலாக குண வேறுபாட்டுக்கு ஏற்ற ஆத்மப் பிரகாசமாக ஒளிர்கின்றது.

மேலும், சத்வகுணம் ஓங்குமிடத்து ஆத்மப் பிரகாசம் நன்கு மிளிர்கிறது.

அதாவது, பார்ப்பதில், கேட்பதில், ஒவ்வொரு இந்திரியத்தையும் கையாளுதலில் திறமையும், எழிலும், தெளிவும் திகழ்கின்றன.

இந்நிலையில் மெய்யறிவு ஓங்குகிறது. விழித்திருந்து அமைதியே வடிவெடுத்தவனாக மனிதன் ஆகும்போது சத்வகுணம் ஓங்கி நிற்கிறது. அப்பொழுது இன்பமும், ஞானமும் விரிவடைகின்றன.

சத்வம் ஓங்கி நிற்கையிலே சரீரத்தை விடும் ஜீவன் மாசற்றவனாகிய உத்தம ஞானிகளின் உலகங்களை அடைகிறான்.

உடலை விடும் பொழுது உள்ளத்தில் என்ன எண்ணம் நிலைத்திருக்கிறதோ அதற்கு ஏற்ப மறுபிறப்பு அவனுக்கு அமைகிறது.

சத்வ குணம் ஓங்கி இருக்கும் பொழுது தெய்விக சிந்தனையிருப்பது உறுதி.

பிரம்மலோகம் முதலிய இடங்களில் சத்வகுணமே நிறைந்திருப்பதால் அம்மனிதன் அந்த லோகத்தை அடைகிறான். ஆனால் அந்த ஞானம் குணங்கள் ஏதுமற்ற **குணாதீதன்** என்ற பரஞானம் ஆகவில்லை என்பதினால், அவன் மறுபிறப்பை அடைகிறான்.

## ரஜோ குணம்

ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தானம், கல்வி, ஆசை, முயற்சி, இறுமாப்பு, வேட்கை, திமிர், தெய்வங்களிடம் செல்வங்கள் வேண்டுவது, வேற்றுமை எண்ணம், புலனின்பப் பற்று, சண்டைகளில் உற்சாகம், தன் புகழில் ஆசை, மற்றவர்களை எள்ளி நகையாடுவது, பராக்கிரமம், பிடிவாதத்துடன் ஒரு முயற்சியை மேற்கொள்ளுதல். பயனில் விருப்பம் கருதி செய்யும் செயல்கள் ராஜசமாகும்.

ரஜோ குணத்திலிருந்து இன்பப் பற்றையும், ரஜோ குணப் பெருக்கினால் அசுரத் தன்மையையும், செயல் புரிவதில் ஆர்வத்தையும், கனவு நிலையையும் அடைகிறான். ரஜோ குணம் விருப்ப இயல்பை உடையது. ஆசையின் சேர்க்கையால் பிறப்பது. அது ஆத்மாவைத் தன் செயல்களின் சேர்க்கையால் கட்டுகிறது.

ஆசை வடிவெடுத்து முடிவில்லாத ப்ரவிருத்தியை உண்டு பண்ணுகிறது. ஒரு காவிக்கல் எவ்வாறு வெள்ளை

வஸ்திரத்தை சிவப்பாக்குகிறதோ அதுப்போன்று ரஜோகுணம் ஆத்மாவுக்கு வர்ணம் கொடுத்து மறைக்கிறது.

வேட்கை என்பது அடையாத பொருளின் மீது அடைய வேண்டும் என்று கொண்டுள்ள விருப்பம். பற்றுதல் என்பது பெற்றுள்ள பொருளை விட்டுப் பிரியலாகாது என்ற மனப்பான்மை. தோற்றத்திலுள்ள இவ்வுலகப் பொருள்களில் வேண்டும் என்ற பற்றும், கிடைக்கவில்லையே என்ற பற்றுதலும் ரஜோ குணத்தால் ஜீவனுக்கு வருகின்றன.

விறகுக் கட்டை எரிகின்ற தீயை வளர்ப்பது போன்று ரஜோ குணம் வினைப்பற்றை வளர்க்கிறது. கர்மம் செய்யாது சாக்ஷியாக இருக்கும் ஆத்மாவை கர்த்தாவாக நினைக்கப் பண்ணுவது இக்குணம்.

எனவே ரஜோ குணம் மேலோங்கி இருக்கும் வரையில் கர்மத்தில் பற்றும் தன்னையே கர்த்தா என்று எண்ணுகிற எண்ணமும் ஜீவனுக்கு இருக்கிறது.

ரஜோகுணம் விக்ஷேபத்தை உண்டு பண்ணுகின்ற இயல்பை உடையது, ரஜோ குணத்தின் தோஷங்கள் மனதில் இருக்குமானால், காமம் போன்றவைகள் மனதைப் பற்றிக் கொண்டு துயரத்தில் ஆழ்த்திவிடும். எப்போதாவது சூட்சுமமான விஷயங்களை அறிய மனம் முற்பட்ட போதிலும், அதனால் உறுதியாக அந்த நிலையில் தொடந்து இருக்கவே முடியாது.

பலமான காற்றினால் அலைபாய்கின்ற தீபத்திலிருந்து வருகின்ற வெளிச்சம், தீபம் ஆடுவதால் எவ்வாறு தெளிவாக இல்லாமல் கலங்கி, மங்கி இருக்குமோ, அதுபோல மனதின் சக்தியும் தெளிவில்லாமல் கலங்கி மங்கி விடுகிறது.

பிறர் பொருள்களை எல்லாம் தன்னுடையவை என ஆக்கிக் கொள்ள விரும்பம் போன்ற பேராசை லோபமாகிறது. இந்திரியங்கள் வாயிலாக வெளியுலக வியவகாரங்களில் ஈடுபடுதல் '**ப்ரவிருத்தி**' எனப்படுகிறது.

அப்படிச் செல்வதால் ஜீவனுக்கு புதிது புதிதாக கர்மங்களை துவக்குவதில் ஊக்கம் உண்டாகிறது. அங்ஙனம் துவக்கிய கர்மங்களில் வெற்றியை அடையும் பொழுது மகிழ்வும், தோல்வியை அடையும் பொழுது மனச்சோர்வும் உண்டாகி, அதுவே அவனது அமைதியை கெடுத்து விடுகிறது.

## தமோ குணம்

காமம், வெகுளி, மயக்கம், கலக்கம், கோபம், பேராசை, பொய் பேசுதல், இம்சை, யாசித்தல், வெளி வேஷம், சிரமம், கலகம், வருத்தம், மோகம், கவலை, தாழ்மை, உறக்கம், அச்சம், சோம்பல், காரணமில்லாமல் பிறரிடம் பொருட்களை எதிர்பார்த்தல் மற்றும் பிறர்க்கு கேடு விளைவிக்கும் செயல்கள் செய்வதும், பகட்டுக்காக செய்யப்படும் செயல்கள் தமோ குணங்கள் ஆகும்.

தமோ குணத்திலிருந்து, சோம்பல் உண்டாகிறது. தமோ குணப்பெருக்கினால் ராக்ஷஸத் தன்மையும், மோகமும் அதிகரிகின்றது.

தமோ குணத்தினால் தூக்க நிலையும் உண்டாகிறது. தமோகுணம் அஞ்ஞானத்தில் பிறப்பதாகும். இதுவே எல்லா ஜீவர்களையும் மயங்கச் செய்கிறது. தவறுதலாலும், சோம்பலாலும், உறக்கத்தாலும் ஜீவனை கட்டுப்படுத்துகிறது.

அஞ்ஞான இருளில் இருந்து வருவதால் இது விவேகத்தை மறைக்கும் தன்மையுடையது. சத்வகுணத்தைக் கெடுப்பது ரஜோகுணம். தமோகுணமோ சத்துவம், ரஜஸ் ஆகிய இரண்டையும் கெடுக்கிறது. அதனால் அறிவும் கெட்டு உணர்ச்சியும் கெட்டு, செயலும் கெட்டுப் போகிற நிலையில் மனிதன் ஜடம் போன்று ஆகி விடுகிறான்.

தமோகுணத்தின் ஆதிக்கத்தால் மனத்தகத்து இருள் சூழ்கிறது. அதனால் விவேகம் மறைந்து போகிறது. ஒரு செயலையும் செய்யாது சோம்பித் திரியும் தன்மை தலை யெடுக்கிறது. அஜாக்கிரதையே வடிவெடுத்தவனாக மனிதன் மாறுகிறான். எனவே, அவன் தவறுகள் செய்தற்கு இடம் ஏற்படுகிறது. மதி மயக்கம் அல்லது திரிவுபட்ட அறிவு அதன் பயனாக வருகிறது.

ஒரு மனிதன் எதில் பற்று வைத்திருக்கிறானோ அதிலிருந்து, அவனிடம் எந்தக்குணம் தலையெடுத்திருக்கிறது என்பது விளங்கும்.

விதவிதமான இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று விரும்புபவனிடத்து சத்வகுணம் முன்னணியில் இருக்கிறது. ஒன்றன்பின் ஒன்றாகப் பலவிதமான அலுவல்களில் ஈடுபட ஆசைப்படுபவனிடம் ரஜோகுணம் ஓங்கியிருக்கிறது.

மேகம் சூரியனை மறைப்பது போன்று தமோகுணம் ஞானத்தை மறைக்கிறது.

தனக்கு ஏற்பட்டுள்ள கடமைகளைச் செய்யாது விட்டு விடுவதால் தமோகுண விருத்தியை உடையவனுக்கு பெரிதாய் கவலை ஏதும் உண்டாவதில்லை. காலத்தை வீணாகக் கழிப்பது, பொருள் விரயமாவது ஆகியவைகளைக் குறித்து அவன் வருந்துவதில்லை. ஜடம் போன்று அவன் செயலற்றுக் கிடப்பான்.

பொதுவாக, இந்த குணங்களின் ஆதிக்கம் எப்படி நடைபெறுகிறது என்றால், ஒரு குணத்தை அடக்கி, மற்றொரு குணம் மேலோங்குகின்றது.

அதாவது, சத்வகுணம் ரஜோ குணத்தையும், தமோ குணத்தையும் அடக்கி மேலோங்குகின்றது, அவ்வாறே தமோ குணத்தை அடக்கி ரஜோ குணம் மேலே நிற்கிறது. மேலும், சத்வத்தையும், ரஜோ குணத்தையும் அடக்கித் தமோ குணம் மிஞ்சுகிறது.

விழித்திருந்த பொழுது அமைதியே வடிவெடுத்தவனாக மனிதன் ஆகும் போது, சத்வகுணம் மேலோங்கி நிற்கிறது. அப்பொழுது இன்பமும், ஞானமும் விரிவடைகின்றன.

ரஜோகுணம் தலையெடுக்கின்ற பொழுது விதவிதமான கர்மத்தில் மனிதன் ஈடுபடுகின்றான். பின்பு தமோ குணம் ஓங்கி இருக்கும் போது மனிதன் கற்கவோ, கர்மம் செய்யவோ முடியாமல் சோம்பலுக்கும், தூக்கத்திற்கும் ஆளாகிறான்.

நாள்தோறும் மூன்று குணங்களும் மாறி மாறி மனிதனுக்கு வருகின்றன. இது எல்லா மனிதர்களுக்கும் பொதுவானது.

ஜீவனது செயல்களின் மாற்றத்திற்கும், எண்ணங்களின் மாற்றத்திற்கும் அந்த சமயத்தில் ஜீவனை பீடிக்கின்ற குணங்களே காரணம். தமோ குணத்தில் இருப்பவன் ரஜோ குணத்துக்கு வர முயல வேண்டும். ரஜோ குணத்தில் இருப்பவன் சத்வ குணத்திற்கு வர முயல வேண்டும்.

எப்படி வரவேண்டும் என்பதையும் பார்ப்போம்.

தமோகுண செயல்பாடுகளை உணர்ந்து தாமஸ உணவை தவிர்த்து, குறைவாக உண்டு, உடலுக்கு தேவையான உறக்கத்தை கொடுக்கலாம். உறக்கம் வரும் போது விருப்பமான செயல்களை செய்யலாம். சிறிது நடக்கலாம். உடற்பயிற்சிகள் செய்யலாம். முக்கியமாக தனிமையை தவிர்க்க வேண்டும். சோம்பலில் இருந்து வெளியே வர நான்கைந்து

முறை மூச்சை ஆழமாக உள்ளே இழுத்து வைத்து பின் மெதுவாக வெளியேற்றலாம். இவை தமோகுணத்தில் இருந்து ஜீவனை விடுபட வைக்கிறது.

ரஜோகுண செயல்பாடுகளை உணர்ந்து பிரவ்ருத்திகளில் அலையும் மனதை நிவ்ருத்தியில் திருப்பலாம். சத்வ குணத்தோடு கூடிய சான்றோர்களை நாடலாம். நற்பண்புகளை வளர்த்துக் கொண்டு தான தர்மங்கள் செய்யலாம். ஜபம் த்யானம் போன்றவைகளை செய்து பிரவ்ருத்தி செய்கின்ற மனதை அமைதிப்படுத்தலாம். இவை ரஜோ குணத்தில் இருந்து ஜீவனை விடுபட வைக்கிறது.

சத்வ இயல்புடைய நிர்மலத் தன்மையே நற் செய்கையின் பயன். ரஜோ குணத்தின் பயன் துன்பம். தமோ குணத்தின் பயன் அறிவின்மை. தமோ குணத்தில் தொழில் இன்மையும், தீவினையும் தோன்றுகின்றன.

அதனால் மனிதனுக்கு முன்னேற்றம் என்பது இல்லை. அத்துடன் ஆழ்ந்து செயலில் ஈடுபடும் போது, அது மேலும் துன்பத்தை விளைவிக்கும். ஆனால் அத்துன்பத்தினால் துன்பப்படுபவன், தன்னைத் திருத்தி நல்வழியில் வாழ்க்கையை அமைக்கிறான். மனிதனுடைய முன்னேற்றத்துக்குத் துன்பம் பயன்படுவது போன்று வேறு எதுவும் பயன்படுவதில்லை.

துயரத்தால் தன்னைத் தூயவனாக ஆக்குபவன் எவனோ அவனே எளிதாக நற்செயலுக்கு வருகிறான்.

அப்பொழுது, தர்மம் அவன் மூலம் நிகழ்கிறது. அதனால் அவன் சத்வகுணம் எய்துகிறான். தூயவன் ஆகிறான்.

இவ்வாறு, நல்ல பழக்கவழக்கங்கள், நற்பண்புகள் போன்றவைகளை கடைப்பிடித்து மனிதன் படிப்படியாகக் கீழான குணங்களினின்று மேலான குணங்களுக்குப் போக முயற்சிக்க வேண்டும் எனக் கூறப்பட்டது.

சத்வகுணத்தில் தேகத்தை விடுபவன் முழு அறிவோடு அமைதியாகச் சாகிறான். ரஜோகுணத்தில் மரணமடைபவன் பதைபதைப்போடும், பேராவலோடும், துன்பத்தோடும் உயிர் துறக்கிறான். இடையறாது கர்மம் செய்யும் பாங்கை உடையவனாக கர்மப் பற்று உடையோரில் அவன் பிறக்கிறான்.

தமோகுணத்தில் தேகத்தை விடுபவன் பிரக்ஞையின்றி ஜட நிலையில் சாகிறான். அவன் கீழான பிறவியில் மிருகமாக அல்லது அறிவிலியாகப் பிறக்கிறான். அதாவது படிப்படியாகக் கீழ்மையையே அடைகிறான்.

ஜீவர்கள் மேலான அல்லது கீழான பிறப்பெடுப்பதற்கும் குணவளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

சத்வ குணம் ஓங்கப்பெற்ற ஒருவன் தெய்வப் பிறப்பும், விவேகம், வைராக்கியம் வாய்க்கப்பெற்ற மானுடப் பிறப்பும் எடுக்கிறான். அவைகளின் வாயிலாக அவன் படிப்படியாகப் பரத்தை நோக்கிச் செல்லுகிறான்.

ரஜோகுணம் நிறைந்துள்ளவன் கர்மங்கள் பல செய்கின்றான் என்றாலும், விவேகம் இல்லாததால் முன்னேற்றம் அடைவதில்லை. விவேகம் வரும் வரையில் அவன் நெடுங்காலம் செயல்களை செய்வதிலேயே கருத்தை உடையவனாக இருக்கிறான்.

இந்த குணங்களின் ஆதிக்கத்தில் இருந்து எப்படி விடுபடுவது? ஏன் விடுபட வேண்டும்? என்றால் நாம் எந்த குணத்தில் இருக்கிறோம் என்று நம்மை நாமே சுய விசாரம் செய்து குணாதீத நிலையில் நின்றால் மட்டுமே நிர்குணமான தூய ப்ரம்மத்தை அறிய முடியும்.

ஸத்வ குணம் மாத்திரமே ஜீவனுக்கு மோக்ஷத்தை தராது. அது வழியைத்தான் காட்டும். ஜீவன் தான் வைராக்யத்தின் துணை கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும்.

இதை ஒரு கதை மூலம் அறியலாம்.

ஒரு மனிதன் ஒரு காட்டு வழியே போய்க் கொண்டிருந்தான். வழியில் மூன்று திருடர்கள் அவனை மடக்கிப் பிடித்துக் அவனிடம் இருந்த பொருள்கள் அனைத்தையும் பிடுங்கிக் கொண்டனர்.

முதல் திருடன் "இவனை இனி உயிருடன் வைத்திருப்பதில் என்ன லாபம்?" என்று சொல்லித் தன் கத்தியை உருவி அவனை வெட்டப் போனான். அப்போது

இரண்டாவது திருடன் "இவனைக் கொல்வதால் லாபம் என்ன? கை கால்களை கட்டி ஓரமாக போட்டு விடலாம்" என்றான். உடனே அவர்கள் இருவருமாக சேர்ந்து அவனை கட்டி சாலையின் ஓரத்தில் அவனைப் போட்டு விட்டுச் சென்றனர்.

அவர்கள் சிறிது தூரம் சென்று மறைந்ததும் மூன்றாவது திருடன் திரும்பி அவனிடம் வந்து "அப்பா, உனக்கு நோகிறதா? கொஞ்சம் பொறுத்திரு. நான் உன் கட்டுகளை அவிழ்த்து உன்னை விடுதலை செய்கிறேன்" என்று சொல்லிக் கட்டுகளை அவிழ்த்து விட்டு, "என்னுடன் வா! உனக்கு இந்த காட்டை விட்டு வெளியே போக வேண்டிய வழியைக் காட்டுகிறேன்" என்று வெகுதூரம் அழைத்துக் கொண்டு போனான்.

ஓரிடத்தில் நின்ற அவன் "அதோ பார்! உன் ஊர் தெரிகிறது, இந்த வழியாக போனால் சீக்கிரம் உனது வீட்டுக்கு நீ போய்ச் சேரலாம்" என்றான். இதைக் கேட்டதும் வழிப்போக்கன் "நன்றி அப்பா! நீ எனக்கு ஒரு பெரிய உபகாரம் செய்திருக்கிறாய். என்னுடன் என் வீட்டுக்கு வரக்கூடாதா?" என்று கேட்டான். அதற்குத் திருடன் "நான் வரக்கூடாது. என்னை திருடன் என அடையாளம் கண்டு என்னைப் பிடித்துக் கொள்வார்கள்" என்று சொல்லி போய்விட்டான்.

இது தான் கதை.

இந்த உலகம் தான் அந்தக் காடு. ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் தான் மூன்று திருடர்கள். ஜீவன் தான் காட்டு வழியே போன பயணி. ஆசைதான் அவனிடம் இருந்த பொருள். தமோ குணமும், ரஜோ குணமும் உலக பந்தங்கள் என்ற சங்கிலியால் அவனைக் கட்டுகின்றன. உலக பந்தங்களில் இருந்து அவனை சத்வ குணம் காப்பாற்றுகிறது.

சத்வகுணத்தை சரணமடையும் ஜீவன் தமோ, ரஜோ குணங்களின் பயன்களாகிய காமக்குரோதாதி மாயைகளில் இருந்து விடுதலையை அடைகிறான். உலக பந்தங்களில் இருந்து ஜீவனைக் கரையேற்றுவது அந்த சத்வ குணமே என்றாலும், அந்த சத்வ குணமும் மோக்ஷத்திற்கு செல்லும் வழிவரையில் ஒருவனை அழைத்து வந்து, அதோ உன் வீட்டைப்பார், என்று சொல்லி விட்டு மறைந்து போகிறது.

எனவே, பிறவின் லட்சியம் தெரிந்து விட்டபின், முறையாக சத்குருவை சரணடைந்து, அவர் கூறிய சத்திய வழியில் நின்று, மெய்ஞானத்தை அடைந்து, அதன் மூலம் இந்த குண தோஷங்களில் இருந்து விடுபட்டு, தானே ப்ரம்மம் என உணர்ந்து, இந்த பிறவிக்கடலை கடந்து விடலாமே!

குணங்களைத் தவிர வேறு கர்த்தா இல்லை என்பதைக் கண்டு, குணங்களுக்கு மேலுள்ள குணாதீதன் என்ற நிலையையும் ஜீவன் அறிவானாயின், சித்தின் இயல்பை எளிதில் அறிவான்.

மூன்று குணங்களுமே பிரகிருதியின் ஸ்வரூபம். ஆதலால், இந்த குணங்களுக்குப் புறம்பாகக் கர்மத்துக்குக் கர்த்தா யாருமில்லை. முக்குணங்களே கர்த்தாக்களாகின்றன.

இந்திரியங்கள், இந்திரியார்த்தங்கள் எல்லாம் குணத்தில் இருந்து உண்டானவைகள். கீழான குணத்தைக் கடந்து மேலான குணத்துக்கு வருவது ஜீவிதத்தின் லட்சியமாகும். பின்பு சுத்த சத்வகுணத்தை அடைந்தால் மட்டும் போதுமா? அதற்கு மேல் ஒன்றுமில்லையா? என்றால் உண்டு.

முக்குணங்களையும் கடந்து, அதற்கு அப்பால் செல்லுவதே வாழ்க்கையின் குறிக்கோளாகும்.

முக்குணங்களுக்கு அப்பால் இருக்கிறது பரமாத்மா. அது ஒரு செயலுக்கும் கர்த்தா அல்ல. அது வெறும் **சாக்ஷி** மாத்திரமே.

அந்த பரமாத்மாவை அறிகிறவன், அந்த பரமாத் மாவுக்கு உரியவன் ஆகிறான். பரமாத்மாவின் சொரூபம் அவனுக்குரியது ஆகிறது.

அருணோதயத்தின் போது தோன்றும் பிரகாசம் சூரியனுடைய உதயத்தைத் தெரிவிக்கின்றது போல, ஈசுவரன் உள்ளத்தில் உதயமாவதற்கு முன்னால், **சுயநலம் கருதாத் தன்மை, பரிசுத்தம், சன்மார்க்கம்** ஆகிய குணங்கள் உண்டாகின்றன.

## சிருஷ்டி

குணங்களால் ஆகிய உடலில் தான் ஜீவன் வசிக்கிறான். ஆனால் அவன் உடலோடு சம்பந்தப்பட்டவன் கிடையாது.

சரீரரத்திற்கு என உண்டான பிறப்பு, இறப்பு, மூப்பு இவைகளால் வரும் துன்பம், பரத்தை உணர்ந்த ஞானியர்க்கு கிடையாது.

ஏனெனில் இவ்வுடலில் இருக்கும் பொழுதே ஞானி தங்கு தடையற்ற பிரம்மானந்தத்தில் இருக்கிறான்.

குணாதீதத்தில் அவன் பேரானந்தம் துய்க்கிறான்.

ஏனென்றால் சரீரம் தோன்றியிருக்கிறது. எனவே அது மறுபடியும் நசித்துப் போகும். ஆனால் ஆத்மாவுக்கு மட்டும் நாசமே இல்லை என்ற அறிவை அந்த ஞானி பெற்றிருக்கிறான்.

உதாரணத்திற்கு புளியங்காய்ப் போன்று ஆத்மாவும், உடலும் இருக்கின்றன. காய் முற்றி பழமானால், பழம் வேறு, மேல் தோல் வேறு என்றாகிவிடும்.

அதுவே முற்றாமல் காயாக இருக்கும் போது, அதை அப்படிப் பிரித்தெடுப்பது மிகவும் கடினம்.

இதையே தான் ம்ருத்யுஞ்ஜய மந்திரமும் வெள்ளரிப் பழத்துடன் ஒப்பிட்டு விளக்குகின்றது.

இந்த மந்திரத்தை ஜபிப்பதால் மரணமே வராது என கருதி, வெறுமனே அந்த மந்திரத்தை சதா ஜபிக்கும் ஒரு கூட்டமே இருக்கிறது.

மந்திரங்களுக்குரிய அதிர்ஷ்டான சக்தி இருப்பது உண்மைதான். ஆனால், தேகம் நசிந்தே ஆக வேண்டும் என்பது ஸ்ருஷ்டியின் நியதி. அது எப்படி நடக்காமல் போகும். கோடி தடவை ஜபித்தும் மரணம் நடந்து விட்டதே! ஜபங்கள் வீணானதே! என்று இறைவனை பழிக்கின்ற ஒரு கூட்டமும் இருக்கத்தான் செய்கின்றது.

அவ்வாறு இறைவனைப் பழிப்பவர்கள் தன்னைத் தானே பழித்தவர்கள் ஆகின்றார்கள். முதலில் எது மரணிக்கிறது என்பதை அறியாமல், மந்திரம் ஜபித்து என்ன பயன்? அறியாமையின் வலிமையை என்னவென்று சொல்வது?

ஒரு மரத்தில் காய் காய்த்திருக்கிறது. அது அந்த மரத்தை நன்றாக பற்றி இருக்கும். அப்போது அந்த காயை நாம் பறிக்கும் போது, அதில் இருந்து ஒரு திரவம் கசிகின்றது. அது அந்த மரத்தின் கண்ணீர் அல்லது இரத்தம் எனலாம்.

அதுவே, அதே காய் நன்கு பழுத்து தேறிய பின்பு, தானாகவே அந்த மரத்திலிருந்து விடுபட்டு விழுகிறது. அதுதான் இயற்கையின் நியதி. அப்போது, அந்த மரத்தில் இருந்து நீர் போன்ற திரவம் அங்கே வெளிப்படுவது இல்லை. ஏனென்றால் பழம் தன்னை விட்டு போகிறதே என மரமோ, மரத்தை பிரிகிறேனே என பழமோ வருந்துவதில்லை.

பழம் என்பது நன்கு பழுத்து பக்குவத்திற்கு வந்த பின்புதான் அந்த மரத்திலிருந்து பழங்கள் விழ வேண்டும் என்பதும் இல்லை. மரத்தில் இருந்து சில காய்கள் பிஞ்சாக இருந்துமே கீழே உதிர்வதும் சாத்தியம் என்பதை உணர்ந்து, ஞான முதிர்ச்சி என்பது வயதான பிறகுதான் வரவேண்டும் என்ற கட்டாயம் எல்லாம் கிடையாது. சிறிய வயதிலேயே கூட சிலருக்கு வந்துவிட்டால், அது பக்குவமான பழத்திற்குச் சமம் என்று கூறலாம். இதைத்தான் பிஞ்சிலேயே பழுத்துவிட்டது என்று சிலர் கூறுவர்.

ஆகவே, அந்த பழத்தை அழியக்கூடிய இந்த தேகத்தோடு சம்பந்தப்படுத்தி பார்க்கக் கூடாது. அழியாத ஆத்ம ஞானத்துடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். ஏனென்றால் ஞானத்திற்கு வயது ஒரு பொருட்டே அல்ல.

மேலும் இந்த உடலுக்குத்தான் வயது ஆகி மூப்பு வந்து விடுகின்றதே தவிர, மனதிற்கு அப்படி இல்லை. அது என்றுமே இளமையுடன் இருக்கின்றது.

நமது பக்தி நம்பிக்கையுடன் இல்லாமைக்கு, நம் மனதுதான் காரணமே அல்லாது, நமது வயது அல்ல. தேகத்திற்கு மட்டும்தான் பிறந்த குழந்தை முதல் வயதாகின்ற கிழவன் வரை பருவங்கள் என மாறும். அதில் முதுமை, பிணி, இறப்பு என்பவைகள் உண்டு.

ஆகவேதான் இந்திரியங்களை கட்டுப்படுத்தாமல், வேறும் பரோக்ஷ ஞானம் மட்டும் பெற்று என்ன ப்ரயோஜனம்? என சாஸ்திரங்கள் கண்டிக்கின்றன.

ஆத்ம தரிசனம் உண்டான பிறகு, அழியாத ஆத்மா வேறு, அழிகின்ற சரீரம் வேறு என்ற ஞானம் உதிக்கும். அதில் தான் ஆத்மா என்பதை அனுபவிக்கிறவன் மட்டுமே மரணமில்லா அமிர்த நிலையில், இந்த சரீரத்துடன் வாழும் போதே இன்பத்தில் துய்க்கிறான்.

## 4. மனமும், குணமும்!

இவ்வாறு அவன் வேறு, படைத்தவன் வேறு என்ற இருமைகள் அற்று, ஏகபரிபூரண ஞான சொரூபியாய் விளங்கும் சாட்சாத் பரப்பிரம்மத்தினிடத்தில் (கானலில் நீர்போல்) கற்பிதமாகத் தோன்றிய இந்த உலகமும், உயிர்களும் மூன்று குணங்களுடன் கூடி, பிரதிபிம்பமாக வெளிப்பட்டதை, அறியாமையினால் அந்த பிரம்மத்திற்கு வேறானதாகக் கருதி, அந்த தவறான கருத்தின் ஆழத்தில் சிக்கிக்கொண்ட சீவர்களின் சந்தேகங்களை நீக்கும் பொருட்டு, வேதாந்த நூல்களில் கூறப்படுகின்ற கருத்துப்படி, கயிற்றில் பாம்பு எவ்வாறு கற்பிதம் செய்யப்பட்டு, அதை உண்மை என்று கருதி, அதன் தோற்றத்தில் மனம் மயங்கி, சஞ்சலமடை கின்றதோ, அவ்வாறே, இந்த உலகத்தின் தோற்றத்தை உண்மையென்று கருதி, உருவமும், பெயர்களும் கொடுத்துக் கொண்டு மனம் சஞ்சலமடைகின்றது.

மூலப்பரக்ருதியான சுத்த ப்ரம்மம் தான் பிரபஞ்சத்துக்கு நிமித்த காரணம். அதோடு தானே சலனத்தை உண்டாக்கி ப்ரகிருதியின் புருஷ ஸ்வரூபமாகத் தானே ஆகின்றான். ஆகையால் உபாதான காரணமும் அவனே. சூக்ஷ்ம ஸ்தூல ரூபமான ப்ரக்ருதியும், வியஷ்டி சமஷ்டி ரூபமான அனைத்து ரூபங்களும் வியக்தமாகவும் அவ்வியக்தமாகவும் இருக்கின்ற

பிரபஞ்சமும் மூலப்பிரகிருதியின் ஸ்வரூப மாயையினால் தோன்றிய இந்த காரியமான ஜகத்தும் அவனன்றி வேறல்ல.

பஞ்சீகரணம் செய்யப்படாத சுத்தமான நிலையில் இருக்கும் பஞ்ச பூதங்கள் சூக்ஷ்ம நிலையாகவும் பஞ்சீகரணத்தால் கலந்துபட்ட நிலையில் உள்ள பஞ்சபூதங்கள் ஸ்தூல நிலையாகவும் இருக்கின்றன.

உதாரணமாக ப்ருத்வியினுடைய இயல்புகளின் ஆதார குணம் எதுவோ அது அதன் சூக்ஷ்ம நிலை. தெளிந்த, கலப்பற்ற, சுத்தமான நிலையில் குணங்களுக்கு ஒரு இருப்பு இருக்கின்றது. அதை சூக்ஷ்ம நிலை என்று அழைக்கிறோம். அந்த குணங்கள் பஞ்சீகரணப்பட்டதும் ஸ்தூல பூதங்களாக வடிவெடுக்கின்றன. அந்த ஸ்தூல பூதங்களால் ஆனவையே நாம் காணும் இந்த ப்ரபஞ்சம்.

நாம் காணும் அனைத்து தோற்றங்களும் பஞ்சீகரணம் செய்யப்பட்ட பஞ்ச பூதங்களால் ஆனதே. நாம் காணும் அனைத்து பௌதீக உடல் மட்டுமன்றி, இதனோடு இயைந்து கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்ணிய உடலும் இருக்கின்றது. அந்த சூக்ஷ்மமான உடல் பஞ்சீகரணம் செய்யப்படாத நிலையில் உள்ள பஞ்ச பூதங்களால் ஆனது என்று கூறுகின்றது விவேக சூடாமணி.

தமோ குணத்தில் உறுதியுள்ள தோன்றும் சக்தியான இந்த விக்ஷேபத்தினால், மிகவும் நுண்ணியதான பஞ்ச தன்மாத்திரைகளாக சப்தம், தொடு உணர்வு, ரூபம், ரஸம், கந்தம் தோன்றி அவை அதனதன் அளவில் இருந்தது.

அதாவது உதாரணமாக, ஓர் ஓசையை நாம் கேட்கும் பொழுது அது மெல்லிசை என்றோ, இனிய ஓசை என்றோ, இன்ன ஓசை என்றோ சில வேறுபாடுகளை உடையதாக, அதன் சிறப்பு வகையால் நமக்குப் புலனாகும். அவ்வேறுபாடுகள் இல்லாமல், வெறும் ஓசை என்னும் அளவில் பொதுவாய் அது புலனாகாது.

ஒரு தொடு உணர்வைத் தோல் மூலமாக உணரும் போது வழுவழுப்பு, சொரசொரப்பு, பிசுபிசுப்பு என்றாற் போலச் சிறப்பு வகையால் உணர்கின்றோமே அல்லாமல், அவ்வேறு பாடுகளற்ற வெறும் உணர்வை நாம் உணர்வதில்லை.

சுவையும் இவ்வாறே, தித்திப்பு, கைப்பு, புளிப்பு என்றாற் போலச் சிறப்பாகப் புலனாகுமே அன்றி வெறும் சுவை என்னும் நிலையில் பொதுவாக அது புலனாவதில்லை. ஏனையவையும் இவ்வாறே.

ஓசை முதலிய ஐந்தும், இங்கு கூறிய சிறப்பு நிலையை எய்தாமல், பொதுவாய் நிற்கும் நிலை உண்டு. அதாவது ஓசையில் பாகுபாடு இன்றி, ஓசை என்னும் அளவில் நிற்கும். ஊறு, வழுவழுப்பு முதலிய பாகுபாடு இன்றி, தொடு உணர்வு என்னும் அளவில் நிற்கும். சுவை இனிப்பு, கசப்பு முதலிய

பாகுபாடு இன்றிச் சுவை என்னும் அளவில் நிற்கும். இதுவே அதனளவில் நிற்றல் என்பதன் பொருள்.

இவ்வாறு நிற்கும் பொதுநிலையில் அவைகள் **தன்மாத்திரைகள்** எனப்படுகின்றன.

செவி முதலிய பொறிகளுக்குப் புலனாகாத நுண்ணிய நிலை இது. ஆகவே இவை சூக்ஷ்ம பூதங்களாயின.

இவற்றிலிருந்தே சூக்ஷ்ம ஆகாசமும், அந்த சூக்ஷ்ம ஆகாசத்தில் இருந்து சூக்ஷ்ம வாயுவும், அந்த சூக்ஷ்ம வாயுவில் இருந்து சூக்ஷ்ம அக்நியும், அந்த சூக்ஷ்ம அக்நியில் இருந்து சூக்ஷ்ம நீரும், அந்த சூக்ஷ்ம நீரில் இருந்து சூக்ஷ்ம ப்ருத்வியும் உண்டாயின.

இவ்வாறு சூக்ஷ்ம பஞ்ச பூதங்கள் உருவாயிற்று. இவற்றிலிருந்து ஸ்தூல பஞ்ச பூதங்கள் பிரிந்தன.

இனி இந்த பஞ்சீகரணம் எவ்வாறு நிகழ்கிறது? பஞ்சீகரணம் என்றால் என்ன? என்பது பற்றியும் பார்க்கலாம்.

ஸ்ருஷ்டிக்க வேண்டும் என்றால் எதை? எப்படி? எங்கே? எது முதலில் வர வேண்டும்? அதற்கு தேவை என்ன? என்பது போன்ற கேள்விகள் வருகிறது அல்லவா?

உதாரணத்திற்கு ஒரு மனிதனுக்கு மாம்பழத்தை ருசிக்க வேண்டும் என்றால் முதலில் அந்த மனிதன் பிறக்க பூமி வேண்டும் பின் உடல் அவயங்கள் வேண்டும். மாம்பழம் இது தான் என ஊர்ஜிதம் செய்யும் மனம், வாசனையை உணரும் மூக்கு, அதை காண கண்கள் ருசிக்க நாக்கு என வேண்டும். அதே போல மாம்பழத்திற்கும் பூமி கொட்டை அது வளர ஒளி காற்று நீர் என வேண்டுமே.

இவ்வாறு படைப்பில் காணப்படும் ரிதம் வியக்கத் தக்கதாக இருக்கிறது. அந்த படைப்பின் ரிதம் அல்லது வரையறுக்கப்பட்ட ஒரு ஒழுங்கு முறையே பஞ்சீகரணம் என்பது ஆகும்.

அதை யார் வகுத்தார்கள் எப்படி வகுத்தார்கள் என்றால் ப்ரம்மத்தின் இச்சையால் தாமாகவே நிகழ்கிறது என்பதை தான் கூற முடியும். ஏனென்றால் இது ஒரு அநாதியான சுழற்சி. இது எப்போது ஆரம்பித்தது என்று கூறவே முடியாது.

# 5. பஞ்சீகரணம்

ஸ்ருஷ்டி செய்ய இடம் வேண்டுமல்லவா அதுவே ஆகாயம். அந்த ஆகாயத்தில் இருந்து வாயு, வாயுவில் இருந்து அக்நி, அக்நியில் இருந்து நீர் நீரில் இருந்து பிருத்வி என்று ஒரு ஒழுங்கில் பூதங்கள் பிரிந்தன.

இவற்றில் ஆகாயம் தவிர்ந்த மற்ற நான்கும் மனிதனால் ஸ்தூல புலன்களால் உணரக்கூடியவை. ஆகாய பூதம் மனிதனை மனிதன் என்று கூறுவதற்கு காரணமான மனமாக, உணர்வாகிய ஆன்மாவுடன் சேர்ந்து மனிதனில் மாத்திரம் முழுமையாக இயங்குகிறது. ஆகாய பூதத்தை தனது மனத்தால் ஆட்சி செய்ய கூடியவன் மனிதன் என்பதாலேயே மனிதன் இன்று சக்தி வாய்ந்த உயிரினமாக விளங்குகிறான்.

மற்றைய உயிரினங்களில் இந்த ஆகாய பூதம் அவை உருவாவதற்கு உரிய மூலசக்தியாக இருக்கின்றதே அன்றி முழுமையாக செயற்படுத்த கூடிய நிலையில் இல்லை, இன்னொரு வார்த்தைகளில் கூறுவதானால் மற்ற உயிரினங்களில் மனம் ஒரு உணரும் கருவியாக மாத்திரம் இருக்கின்றதே அன்றி, தனது உணர்வின் இச்சையால் செயற்படுத்தப்படும் கருவியாக இல்லை.

ஐம்பூதங்களில், ஒவ்வொரு பூதமும் இருகூறாக ஆகி, அதில் ஒரு கூறை நிறுத்திக் கொண்டு, மற்றொரு கூறை நான்கு கூறுகள் ஆக்கி, அந்த நான்கை மற்ற நான்கு பூதங்களுக்குக் கொடுத்தும் வாங்கியும் தம்மில் கலப்பதுமான ஒழுங்கு முறையே “**பஞ்சீகரணம்**” எனப்படும்.

எப்படியென்றால் நான்கு பங்கு ஆகாசத்தில், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நீர், ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியவை சேர்கின்றன. நான்கு பங்கு காற்றில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு நெருப்பு, ஒரு பங்கு நீர் மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியவை சேர்கின்றன. நான்கு பங்கு நெருப்பில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நீர் மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியவை சேர்கின்றன. நான்கு பங்கு நீரில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியவை சேர்கின்றன. நான்கு பங்கு நிலத்தில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நீர் ஆகியவை சேர்கின்றன. இவ்வாறு ஒரு பூதத்தின் நான்கு நிரைகளுடன், மற்ற நான்கு பூதங்களின் ஒவ்வொரு நிரை சேர்வது பஞ்சீகரணம்.

பஞ்சீகரண தத்துவ அடிப்படையில் பார்த்தால் எந்த ஒரு பூதமும் தனித்த ஒரு நிலையில் பூதமாக இல்லை. ஒன்றில் இருந்து மற்றொன்று உருமாற்றப்பட்டே உருவாகின்றன. இந்த ஐந்து பூதங்களும் வெறுமனே ஒன்றுடன் ஒன்று அடுக்கப்பட்ட கற்கள் போல் காணப்படவில்லை.

ஒவ்வொரு பூதமும் தான் அடுத்த பூதமாக மாறும் ஆற்றலை கொண்டிருக்கின்றன.

இந்த ஆற்றலால் தான் அவை அழிவிற்கும் உட்படும்போது ஒன்றுடன் ஒன்று கலந்து மீண்டும் தனது ஆரம்ப நிலைக்கு செல்லக் கூடியதாக இருக்கின்றது. அதனால் ஒரு பூதம் மற்றொரு பூதமாக மாறுவதற்குரிய அடிப்படைப் பண்பினையும் மாறும் இயல்பினையும் கொண்டிருக்கும்.

உதாரணமாக, அக்னியை எடுத்துக் கொண்டால் அதன் அடிப்படை உஷ்ணம், மற்றைய பூதமாக உருமாருவதற்குரிய பண்பு வரட்சி. ப்ருதிவியை எடுத்துக்கொண்டால் அடிப்படை வரட்சி, மற்றைய பூதமாக உருமாருவதற்குரிய பண்பு குளிர்ச்சி. நீரை எடுத்துக்கொண்டால் அடிப்படை குளிர்ச்சி, மற்றைய பூதமாக உருமாருவதற்குரிய பண்பு ஈரம். வாயுவை எடுத்து கொண்டால் அடிப்படை ஈரம், மற்றைய பூதமாக உருமாரு வதற்குரிய பண்பு உஷ்ணம்.

இந்த அடிப்படையினை வைத்துக்கொண்டு இரண்டு எதிர் எதிர் பூதங்களை அடையாளம் கண்டு கொள்ளலாம். நீரும், அக்னியும் எதிர் பூதங்கள். நிலமும், வாயுவும் எதிர் பூதங்கள் ஆகும். அடுத்த பாகுபாடு நீரும், நிலமும் பாரமானவை, இவற்றின் செயல் மெதுவானவை. அக்னியும், வாயுவும் இலகுவானவை, இவற்றின் செயல் விரைவானவை.

## சிருஷ்டி

படைப்பின் தொடக்கத்தில் தோன்றிய பஞ்ச சூக்ஷ்ம பூதங்கள், தம்மில் ஒன்றுடன் ஒன்று சேர்க்கை நடைபெறாமல் இருந்ததால், செயல்பாடுகள் நிறைந்த இந்த உலகிற்குத் தகுந்த, ஸ்தூலப் பொருட்களை தோற்றுவிக்கும் திறமையற்று விளங்கியது.

இந்த பஞ்ச சூக்ஷ்ம பூதங்கள் உண்டாவதற்குக் காரணமான மாயையிலிருந்து அவித்தையும் (அஞ்ஞானம்), அவித்தையிலிருந்து அஹங்காரம் என்னும் ஆவரண, விக்ஷேப சக்தியும், அதிலிருந்து சப்த (ஒலி), ஸ்பரிச (உணர்சி), ரூப (தோற்றம்), ரச (நீர்), கந்த (மணம்) எனும் ஐந்து "**தன்மாத்திரைகள்**" உண்டாகின.

ஸ்பரிச தன்மாத்திரையிலிருந்து வாயு தத்துவமும், ரூப தன்மாத்திரையும் தோன்றின.

ரூப தன்மாத்திரையிலிருந்து அக்நி தத்துவமும் ரஸ தன்மாத்திரையும் தோன்றின.

ரஸ தன்மாத்திரையில் இருந்து ஜல தத்துவமும் கந்த தன்மாத்திரையும் தோன்றின. கந்த தன்மாத்திரையிலிருந்து ப்ருத்வி தத்துவம் தோன்றியது.

இதுவே தோற்றத்தின் வரிசைக் கிரமம்.

இந்த ஐந்திலிருந்தும் சூட்சுமமாக **மண், நீர், நெருப்பு, காற்று** மற்றும் **ஆகாயம்** என்ற பஞ்ச பூதங்கள் தோன்றின.

இவைகள் கண்ணிற்குத் தெரியாத ஐந்து சூக்ஷ்ம பூதங்கள்.

சூக்கும நிலையில் உள்ள பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் இரு சமமான பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன.

பூதங்கள் ஐந்தில் ஒவ்வொரு பூதத்திலிருந்து இரண்டு பூதங்களாகப் பிரிந்து, அவைகளில் பிரிந்த இரண்டு விதமான பஞ்ச பூதங்களில் ஒன்று அனைத்தும் சேர்ந்து சமஸ்டி, (ஒன்றாகவும்) யாகவும், மற்றொன்று வியஸ்டி (தனித்தனியாக) யாகவும் என ஐந்து பூதங்களும் தோன்றின.

அது எப்படியென்றால்,

இவ்விதமாக பிரிக்கப்பட்ட பத்து பகுதிகளில் முதல் ஐந்து பகுதிகள் ஒவ்வொன்றும் நான்கு சமமான பகுதிகளாக பிரிக்கப்படுகின்றது.

இதன்பிறகு, ஒவ்வொரு பூதத்தின் மூலப்பொருளின் ஒரு பகுதி மற்ற நான்கு மூலப்பொருட்களின் நான்கு பகுதிகளுடன் சேர்க்கப்படுகிறது.

இதனைக் கீழ்கண்டவாறு பகுத்து ஆராயலாம்.

எடுத்துக்காட்டு பூமி. (பகுதி) செயல்படா சூக்கும பஞ்சபூதங்களின் கலவையினால் எவ்வாறு செயல்படும் சட பூமி (ஸ்தூல பூமி) உருவாகிறது எனில் = ½ பங்கு சூக்கும

பூமி + 1/8 பங்கு நீர் + 1/8 பங்கு நெருப்பு + 1/8 பங்கு காற்று + 1/8 பங்கு ஆகாயம் - இந்த விகிதத்தில் பஞ்ச சூக்கும பூதங்களின் கலவையினால் (பஞ்சீகரணத்தினால்) செயல்படும் இந்த சட பூமி உருவாகிறது.

இது போன்ற கலவையால் (பஞ்சீகரணத்தால்) மற்ற சடமான பஞ்ச பூதங்களான ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் ஆகிய சட பூதங்கள் உருவாகிறது.

இவ்வாறு சூக்ஷ்ம பூதங்கள் ஸ்தூல வடிவ பஞ்ச பூதங்களாக வெளிப்படும் தன்மையை இந்த பஞ்சீகரணத்தால் தான் பெற்று செயலாற்றும் தகுதியைப் பெறுகின்றன.

ஆக சூட்சும நிலை ஆகாயம் = 1/2 + 1/8 + 1/8 + 1/8 + 1/8 என ஐந்து பகுதிகளாகப் பிரிகிறது.

இப்பொழுது இதை சூக்ஷ்ம நிலை ஆகாயம் = ஆ1 + ஆ2 + ஆ3 + ஆ4+ ஆ5 என கொள்வோம்.

இதைப்போலவே நீர்= நீ1 + நீ2+ நீ3 + நீ4 + நீ5 என்றும் அக்நி = அ1 + அ2 + அ3 + அ4 + அ5 என்றும் நிலம் = நி1 + நி2 +.நி3 +.நி4 + நி5 என்றும் காற்று = கா1 + கா2 + கா3 + கா4+ கா5 என்றும் கொள்வோம்.

சூக்ஷ்மநிலை ஸ்தூல நிலையாக எவ்வாறு மாறுகிறது?

சூக்ஷ்ம நிலை ஆகாயத்தின் ஆ1 பகுதி நீ2 + அ2 + நி2 + கா2 என்ற நான்கு சூட்சும பகுதிகளுடன் சேர்ந்து ஸ்தூல ஆகாயமாக மாறுகிறது.

இப்போது ஸ்தூல ஆகாயம் = ஆ1 + நீ2 + அ2 + நி2 + கா2 ஆகும்.

இதைப்போலவே மற்ற ஸ்தூல பூதங்களும் உண்டாயின.

இன்னும் சொல்லப் போனால் பஞ்ச பூதங்களின் மூலப் பொருட்களில் ஒவ்வொன்றுமே ஐந்து பூதங்களின் மூலப் பொருட்களின் கலவையைப் பெற்று இருப்பதால், எந்த பூதத்தின் மூலப்பொருளின் பகுதியானது அதிக பங்கு உள்ளதோ அந்த பூதத்திற்கு அப்பெயரே நிலை பெறுகிறது.

எடுத்துக்காட்டாக பஞ்சீகரணத்தில், நீர் எனும் சூக்ஷ்ம பூதத்தின் மூலப்பொருளின் அளவு அரைப் பங்காகவும், மற்ற நான்கு பூதங்களின் அளவு 1/8 பங்காகவும் இருப்பின் இக்கலவைக்கு நீர் எனும் பூதம் எனப்படுகிறது.

மேலும், பூமியானது நீர், அக்நி, ப்ருத்வி என்கிற மூன்று முக்கியப்பகுதிகளைக் கொண்டிருந்தாலும், அவற்றுள் மண்ணே அதிகம். எனவே பூமி அல்லது மண் என்றே அது பெயர் பெறலாயிற்று.

பஞ்சீகரணத்தால் சூக்ஷ்ம பூதங்கள், ஸ்தூல பூதங்களாக உருக்கொண்டாலும் ஒரு பூதம் எந்த பூதத்திலிருந்து தோன்றியதோ, அப்பூதத்தின் தன்மையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

இதை முன்பே கண்டிருந்தாலும் எப்படி ஆனது என்பதை இங்கே பார்க்கலாம்.

ஆகாயம் எனும் ஸ்தூல பூதத்தின் குணம் சப்தம். ஆகாயம் எனும் பூதத்திலிருந்து தோன்றிய காற்று எனும் ஸ்தூல பூதத்தில் தன் சுய தன்மையான தொடு உணர்வு என்ற குணத்துடன் ஆகாயத்தின் குணமான சப்தமும் சேர்ந்து இரு தன்மைகளை கொண்டிருக்கிறது.

இந்த காற்று எனும் பூதத்திலிருந்து தோன்றிய அக்நி எனும் ஸ்தூல பூதத்தில் தன் சுய தன்மையான ஒளியுடன், ஆகாயத்தின் தன்மையான சப்தமும் காற்றின் தன்மையான தொடு உணர்வும் ஆக மூன்று தன்மைகளை கொண்டுள்ளது.

இந்த அக்நி எனும் பூதத்திலிருந்து தோன்றிய நீர் எனும் ஸ்தூல பூதத்தில் தன் சுய தன்மையான சுவையுடன், ஆகாய பூதத்தின் சப்தம் காற்று எனும் பூதத்தின் தொடு உணர்வும் அக்நி எனும் பூதத்தின் வடிவம் எனும் நான்கு தன்மைகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்த நீர் எனும் பூதத்திலிருந்து தோன்றிய பூமி எனும் ஸ்தூல பூதத்தில், தன் சுய தன்மையான மணம், நீரின் சுவை அக்நியின் வடிவம், காற்றின் தொடு உணர்வு ஆகாயத்தின் சப்தம் ஆகிய ஐந்து தன்மைகளை கொண்டுள்ளது.

பஞ்ச பூதங்களின் ஆதார குணங்களாகிய இந்த தன்மாத்திரைகள், தனித்தனியே, சுத்தமான, கலப்பற்ற தெளிந்த நிலையிலும் விளங்குகின்றன. ஒன்றோடு ஒன்று கலந்துபட்ட நிலையிலும் விளங்குகின்றன.

அந்தக் கலப்பு ஒரு ருதத்துடன் நிகழ்கின்றது. **'ருதம்'** என்றால் ஒருவகையான இயற்கை ஒழுங்கு. நான்கு பங்கு ஆகாசத்தில், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நீர், ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

பஞ்சீகரணத்தால் சூக்கும பூதங்கள், ஸ்தூல வடிவ பஞ்ச பூதங்களாக வெளிப்படும் தன்மையைப் பெற்று செயலாற்றும் தகுதியைப் பெறுகின்றன.

# 6. தத்துவங்கள்

அதாவது, சூட்சுமமான (கண்ணிற்குத்தெரியாத) **மண், நீர், நெருப்பு, காற்று** மற்றும் **ஆகாயம்** என்ற ஐந்து பூதங்களிலிருந்து, ஸ்தூல (கண்ணிற்கு தெரிகின்ற) *மண், நீர், நெருப்பு, காற்று* மற்றும் *ஆகாயம்* என்ற ஐந்து பூதங்களும் உண்டாகி, அந்த ஐந்து பூதங்களின், ஒவ்வொரு பூதத்திலிருந்து இரண்டு பூதங்களாகப் பிரிந்து, அவைகளில் பிரிந்த இரண்டு விதமான பஞ்ச பூதங்களில், முதல் ஐந்து பூதங்களும் சேர்ந்து ஒன்றாகவும் (சமஸ்டியாகவும்), மற்ற ஐந்தும் தனித்தனியாக (வியஸ்டியாகவும்) ஐந்து பூதங்களும் உண்டாயின என அறிந்தோம்.

இதில், ஐந்து பூதங்களும் ஒன்றேயான சமஸ்டி பஞ்ச பூதங்கள் "**பிரபஞ்சம்**" ஆயிற்று.

இரண்டாவதகாக பிரிந்த ஐந்து பூதங்களும் தனித் தனியாக அப்படியே வியஸ்டியாக உள்ள அந்த பஞ்ச பூதங்கள் "**இருபத்து நான்கு தத்துவங்களாக**" உண்டாயிற்று.

இந்த 24 தத்துவங்களில் அந்தக்கரணங்கள் நான்கு (4), வாயுக்கள் ஐந்து (5), ஞானேந்திரியங்கள் ஐந்து (5),

தன்மாத்திரைகள் ஐந்து (5), கர்மேந்திரியங்கள் ஐந்து (5) ஆகியவை அடங்கும்.

அது எப்படியென்றால்,

இதுப்போல, பஞ்சபூதங்களையும் **சமஸ்டி, வியஸ்டி** பாகங்களாகச் செய்து ஒரு பூதத்துடன் மற்றொரு பூதம் சேர்ந்தபோது இருபத்தைந்து தத்துவங்களாக ஜீவர்களுக்கு **சரீரரூபத்தை** *(உடல்கள்)* கொடுக்கின்றது.

முதலில் ஆகாசம் என்ற ஒரு பூதத்தை எடுத்துக் கொண்டு, அதை இரண்டு பாகமாகப் பிரித்து, அதில், ஒரு பாகத்தை **சமஸ்டி** என்று சொல்லப்படும் மற்ற நான்கு பூதங்களுடன் சேர்த்து ஒன்றாக வைத்துக் கொள்ளப்பட்டது.

இந்த சமஸ்டி பாகத்தைத்தான் நாம் **பிரபஞ்சம், ஈஸ்வரன், மாயா** என்று பலவாறாக அழைக்கின்றோம்.

மற்றொரு பாகத்தை **வியஸ்டி** என்று சொல்லப்படும் தனித்தனி பஞ்ச பூதங்களாக வைத்துக் கொள்ளப்பட்டது. இதிலே இனி ஆன்ம தத்துவங்கள் 24 எவ்வாறு தோன்றின என்பதையும் பார்க்கலாம்.

இதுவரை பார்த்ததில் அனைத்தும் பஞ்ச பூதங்களின் தொகுப்பே என்பதை நன்கு உணர முடிகிறது.

அதில் முதல் பாதி பாகமான சமஸ்டி ஆகாசம் '**ஞாதா**' என்று சொல்லப்படுகின்றது. ஞாதா என்பது ஈஸ்வரனும், ஈஸ்வரனின் பிரதி பிம்பமும் கூடியதே ஆகும்.

அடுத்து, இரண்டாவது பாதி பாகமான வியஸ்டி ஆகாசத்தை நான்கு பாகமாகச் செய்து, அதில் முதல் பாகமான வியஸ்டி ஆகாசத்தை வாயுவுடன் சேர்த்த பொழுது, "**மனம்**" என்னும் தத்துவம் உண்டாயிற்று.

இதில் முந்தைய பிறவிகளின் பல்வேறு எண்ணத் தொகுப்புகள் சூக்ஷூமமாக இந்த மனதில் அடங்கிவிடுகிறது. இந்த மனம் என்ற அந்தக்கரணம் புறத்தேயுள்ள பொருளைச் சென்று பற்றுவதாகும்.

அதாவது, காற்று எப்படி தானாக எழுகிறதோ அது போலவே, மனமானது அதில் பதிவாகியுள்ள எண்ணங்களை அடிப்படையாக கொண்டு தானாக எழும்புகிறது. இந்த மனமே தான் இந்திரியங்களை இயங்கச் செய்து தன் தேவையை பூர்த்தி செய்து கொள்கிறது. இதுவே காலத்தையும் தேசத்தையும் தீர்மாணிக்கிறது.

மேலும், மனதை நன்கு ஆராய்ந்தால் மனதின் திருப்திக்காகவேதான் மனிதன் அத்தனை பாடுபடுகிறான். அலைகின்ற இந்த மனதோடு தன்னை நெருக்கமானதாக சம்பந்தப்படுத்திக் கொண்டு தான் துக்கப்படுவதாகவும் சந்தோஷப்படுவதாகவும் தன்னைத் தானே குறையுள்ளவனாக கூறிக்கொள்கிறான்.

இந்த மனம் எதை அறிகின்றதோ, அவைகளையே இந்திரியங்கள் அறிகின்றன. அதாவது வீட்டினுள் இருப்ப வனுக்கு **ரோஜா செடி** என்ற குரல் கேட்டதும், மனம் ஏற்கனவே அறிந்து வைத்துள்ள அந்த பெயரின் சம்பந்தப் பட்ட **நிறம், உருவம், இடம், உயரம்** என அதனோடு தொடர்புடைய அத்தனை விசயங்களையும் ஒரு நொடியில் மனம் எண்ணுகின்ற மகத்தான சக்தியுடையது.

இதிலிருந்து பெயர் மற்றும் உருவத்தை வைத்து மட்டுமே இங்கு நிகழ்வுகள் நடைபெறுகின்றன என்பது தெளிவாகிறது. எனவே தான் உருவமற்ற நிர்குண பரப்ரும்மத்தை இந்த மனதால் எளிதாக அறிய முடியவில்லை.

இரண்டாவது பாகமான வியஸ்டி ஆகாசத்தை அக்கினியுடன் சேர்த்த பொழுது, “**புத்தி**” என்னும் தத்துவம் உண்டாயிற்று.

இதிலே ‘**அக்நி**’ என்றாலே ஒளி, வெளிச்சம். வெளிச்சத்தை ஒளியை நல்ல செயலுக்கும் பயன் படுத்தலாம். தீய செயலுக்கும் பயன் படுத்தலாம். ஆம் புத்தியை அதுபோல ஆக்க செயலுக்கும் அழிவுச் செயலுக்கும் பயன் படுத்தலாம். பயனுள்ளதானால் புண்ணிய பலனாகவும் பயனற்றதானால் பாவ பலனாகவும் ஆகிறது. இந்த புண்ணிய பாவங்களே அடுத்த மேலான மற்றும் கீழான பிறவிக்கு காரணமாக அமைகிறது.

மூன்றாவது பாகமான வியஸ்டி ஆகாசத்தை நீருடன் சேர்த்த பொழுது, “**சித்தம்**” என்னும் தத்துவம் உண்டாயிற்று.

சித்தம் என்பது, சதா எண்ணங்களை அசை போடுவது இங்கே நடக்கிறது. அமைதியான தடாகத்தின் நீரில், விரலை வைத்ததும் எப்படி சலனம் ஏற்பட்டு, வட்ட வடிவ அலைகள் சிறிதாக முதலில் தோன்றி, எவ்வாறு கரை வரை அது விரிந்து பெரிதாக ஆகிறதோ அது போலவே, எண்ணங்களை சிறிது பற்றினாலே, அது பெரிதாக ஆகி, மனதை ஆக்கிரமித்து புத்தியை அதன் வழியில் சிந்திக்க செய்தும் விடுகிறது.

நன்கு ஆராய்ந்தால் இங்கு மனம் என்பது கடந்த கால நிகழ்வுகளையோ, அல்லது வருங்கால திட்டத்தையோ தான் சிந்திக்கும். இதற்கு ஆதாரமாக ஏற்கனவே மனதில் உள்ள விஷயத்தினை எடுத்துக் கொள்ளும். அதை தான் **பூர்வ வாசனைகள்** அல்லது **சம்ஸ்காரங்கள்** என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அதை சம்பந்தப்படுத்தி பார்க்கும். மனம் என்பது இப்படி எதையாவது சிந்திக்கும் அல்லது யோசிக்கும். எனவே மனதில் எழும்பும் எண்ணங்களை பற்றாமல் வேடிக்கை பார்க்கும் போது மட்டும்தான், மனிதன் அதன் பிடியில் இருந்து தப்பித்தும் விடுகிறான்.

அடுத்து, நான்காவது பாகமான வியஸ்டி ஆகாசத்தை மண்ணுடன் சேர்த்த பொழுது, “**அஹங்காரம்**” என்னும் தத்துவம் உண்டாயிற்று.

பூர்வ வாசனையினால் ஏற்படுகின்ற எண்ணங்களின் தூண்டுதலினால் புத்தியை கொண்டு மனதினால் ஏவப் பட்டவனாக, “**நான்**”, “**எனது**” என்ற கர்வத்தை கொண்டவனாகி காமக்ரோதாதிகளால் பீடிக்கப்பட்டவனாக ஆகிறான்.

இங்கு கர்த்ருத்துவமும், போக்துத்ருவமும் மேலோங்கி பெயரையும், புகழையும் விரும்பியவனாய் தகாததை தகும் என புத்தியை கொண்டு தீர்மாணிக்க செய்து, பல்வேறு காரியங்களை சாதித்துக் கொள்கிறான். ‘**நான் இதனை அறிவேன்**’. ‘**நான் இதனைச் செய்வேன்**’. ‘**நான் இதனை நுகர்வேன்**’ என்று எச்செயலிலும் மனம் முனைத்து எழுவதற்கு, இதுவே கருவியாகும்.

இவ்வாறு, இந்த **மனம், புத்தி, சித்தம்** மற்றும் **அஹங்காரம்** என்னும் நான்கையுமே “**அந்தக்கரணம்**” என்று சொல்லப்படும்.

பொதுவாக, அந்தக்கரணம் என்றால் உள்கருவிகள் எனப்படும். இவைகளைப் பார்க்க முடியாது. ஆனால், உணர முடியும்.

இதுப்போலவே, வாயுவை இரண்டு பாகங்களாக பிரித்து, அதில் முதல் பாகம் ’**சமஸ்டி**’ என்று சொல்லப்படும்.

இரண்டாவது பாகம் ‘**வியஸ்டி**’ என்று சொல்லப்படும்.

இதில் முதல் பாதி பாகம் சமஸ்டி வாயு “**வியானன்**” என்று அழைக்கப்படுகின்றது.

இரண்டாவது பாதி பாகமான வியஸ்டி வாயுவை நான்கு பாகமாகச் செய்து, அதில் முதல் பாகமான வியஸ்டி வாயுவை, ஆகாசத்துடன் சேர்த்த பொழுது, “**சமானம்**” என்னும் வாயு உண்டாயிற்று.

இரண்டாவது பாகமான வியஸ்டி வாயுவை அக்கினியுடன் சேர்த்த பொழுது, “**உதானன்**” என்னும் வாயு உண்டாயிற்று.

மூன்றாவது பாகமான வியஸ்டி வாயுவை நீருடன் சேர்த்த பொழுது, “**பிராணன்**” என்னும் வாயு உண்டாயிற்று.

நான்காவது பாகமான வியஸ்டி வாயுவை மண்ணுடன் சேர்த்த பொழுது, “**அபானன்**” என்னும் வாயு உண்டாயிற்று.

இந்த **வியானன், சமானன், உதானன், பிராணன்** மற்றும் **அபானன்** என்று ஐந்து வாயுக்களும் எல்லா ஜீவராசிகளுக்கும் ஐந்து பிராணன்களாக உள்ளன.

இதுபோல, அக்னியை இரண்டு பாகங்களாக பிரித்து, அதில் முதல் பாகம் **சமஸ்டி** என்று சொல்லப்படும். இரண்டாவது பாகம் **வியஸ்டி** என்று சொல்லப்படும்.

இதில் முதல் பாதி பாகம் சமஸ்டி அக்னி, “**கண்கள்**” ஆயிற்று.

இரண்டாவது பாதி பாகமான வியஸ்டி அக்னியை நான்கு பாகமாகச் செய்து, அதில் முதல் பாகமான வியஸ்டி அக்னியை, ஆகாசத்துடன் சேர்த்த பொழுது, “**காதுகள்**” உண்டாயிற்று.

இரண்டாவது பாகமான வியஸ்டி அக்கினியை வாயுவுடன் சேர்த்த பொழுது, “**தோல்**” உண்டாயிற்று.

மூன்றாவது பாகமான வியஸ்டி அக்னியை நீருடன் சேர்த்த பொழுது, “**நாக்கு**” உண்டாயிற்று.

நான்காவது பாகமான வியஸ்டி அக்னியை மண்ணுடன் சேர்த்த பொழுது, “**மூக்கு**” உண்டாயிற்று.

இவ்வாறு அக்கினியை சமஸ்டி, வியஸ்டியாகச் செய்து, அதில் உண்டாகிய **கண்கள், காதுகள், சரீரம், நாக்கு,** மற்றும் **மூக்கு** என்ற ஐந்து இந்திரியங்களையும் “**ஞானேந்திரியங்கள்**” எனப்படுகின்றது.

இதுபோல, நீரை இரண்டு பாகங்களாக பிரித்து, அதில் முதல் பாகம் ‘**சமஸ்டி**’ என்று சொல்லப்படும்.

இரண்டாவது பாகம் ‘**வியஸ்டி**’ என்று சொல்லப்படும்.

இதில் முதல் பாதி பாகம் சமஸ்டி நீர் ரச தன்மாத்திரை ஆயிற்று.

அதாவது "ருசி" அறிவதாயிற்று.

இரண்டாவது பாதி பாகமான வியஸ்டி நீரை நான்கு பாகமாகச் செய்து, அதில் முதல் பாகமான வியஸ்டி நீரை, ஆகாசத்துடன் சேர்த்த பொழுது, "**சப்தம்**" (ஒலி) உண்டாயிற்று.

இரண்டாவது பாகமான வியஸ்டி நீரை, வாயுவுடன் சேர்த்த பொழுது, "**ஸ்பரிசம்**" (தொடு உணர்ச்சி) உண்டாயிற்று.

மூன்றாவது பாகமான நீரை அக்னியுடன் சேர்த்த பொழுது, "**ரூபம்**" (பார்வை) உண்டாயிற்று.

நான்காவது பாகமான நீரை, மண்ணுடன் சேர்த்த பொழுது, "**கந்தம்**" (வாசனை) உண்டாயிற்று.

இவ்வாறு, *ஸப்த, ஸபரிச, ரச, ரூப, கந்த*மென்னும் ஐந்தும் "**பஞ்ச தன்மாத்திரை**" களென்று சொல்லப்படும்.

இதுபோல, மண்ணை (பிருத்வி) இரண்டு பாகங்களாக பிரித்து, அதில் முதல்பாகம் **சமஸ்டி** என்று சொல்லப்படும். இரண்டாவது பாகம் **வியஸ்டி** என்று சொல்லப்படும்.

இதில் முதல் பாதி பாகம் சமஸ்டி மண், மலத்தை வெளித்தள்ளும் “**குதம்**” (ஆசனவாய்) ஆயிற்று.

இரண்டாவது பாதி பாகமான வியஸ்டி மண்ணை நான்கு பாகமாகச் செய்து, அதில் முதல் பாகமான வியஸ்டி மண்ணை, ஆகாசத்துடன் சேர்த்த பொழுது, “**வாக்கு**” உண்டாயிற்று. அதாவது பேசுவதற்கு **வாய்** உண்டாயிற்று.

இரண்டாவது பாகமான வியஸ்டி மண்ணை வாயுவுடன் சேர்த்த பொழுது, “**பாணி**” (கை) உண்டாயிற்று.

மூன்றாவது பாகமான வியஸ்டி மண்ணை அக்னியுன் சேர்த்த பொழுது, நடக்கவும், நிற்கவும் “**பாதங்கள்**” உண்டாயிற்று.

நான்காவது பாகமான வியஸ்டி மண்ணை நீருடன் சேர்த்த பொழுது, “**குய்யம்**” (மர்மஸ்தானம்) உண்டாயிற்று. அதாவது, ஆண், பெண்களுக்கு கண நேர சந்தோசத்தைக் கொடுக்கும் மர்மஸ்தானம் உண்டாயிற்று.

மேற்சொல்லிய **வாக்கு, பாணி, பாதம், குய்யம்** மற்றும் **குதம்** என இவ்வைந்தும் “**கர்மேந்திரியங்கள்**” என்று அழைக்கப் படுகின்றன.

இவ்வாறு இந்த இருபத்தி நான்கு (24) தத்துவங்களும் தோன்றின.

இதிலே, ஆகாச தத்துவமாக இறைவனே இந்த உடல் என்னும் உபாதியின் அகத்தில் இருந்துக் கொண்டு, அவனை அறிய முடியாதவாறு, வெளிமுகமாகவே இயங்கும் புறக் கருவிகளை கொண்டு அனைத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

அவனை எளிதாக அறிய வேண்டுமெனில் சற்றே புறக் கருவிகளை விடுத்து, அகக் கருவிகளான அந்தக்கரணத்தை ஆராய்ந்தால், அதற்கு ‘**விசாரம்**’ என்று பெயர்.

இந்த விசாரத்தின் வாயிலாக ‘**நான்**’ என்பது எது?

அந்த நானை “**நான்**” என்று உணர வைக்கின்ற உன்னதமான ஒன்று எல்லாவற்றிலும் வியாபித்து இருக்கும் போது, அந்த ப்ரம்மமே இந்த தேகத்தினுள்ளும் இருந்துக் கொண்டு, அதுவே இந்த தேகத்தை அனுபவித்துக் கொண்டும் இருக்கின்றது. அவ்வாறு இருக்க, அந்த ப்ரம்மம் எனக்கு வேறாக அறியப்பட முடியாதது. ஏனென்றால் அதுவே “**நான்**”.

என்னை எப்படி எனக்கு வேறாக அறியப்பட முடியும்?

இந்த இருபத்தி நான்கு (24) தத்துவங்களில், முதலில் இந்த மேலோங்கிய அஹங்காரத்தை விட்டு என்னால் ஆவது ஒன்றுமே இல்லை என்பதை உணர்ந்து இறைவனை நம்பி சரணடையும் போது தான் அன்பே வடிவான இறைவனின் பெருமைகளை அறிய முடியும்.

அப்போதுதான் மனதின் செயல்களே சுக துக்கத்திற்கு காரணம் என தெரிய வரும்.

மேலும் அதுவே ஆன்மாவை அறிய தடையாக இருக்கிறது என்பதையும் அறியமுடியும்.

புத்தியை கொண்டு மனதை ஆராய்ந்தால் மனது எண்ணங்களினால் செயல்படுகிறது என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

எனவே, எத்தனை அதி சூக்ஷுமமான விஷயங்களை சாஸ்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன. எத்தனை உயரிய நோக்கங்களோடு நமது முன்னோர்கள் கருணையினால் நமக்குக் கொடுத்துள்ளனர் என்று அறியும் பொழுது, நமது எண்ணங்களை முறைப்படுத்தினால், ஆன்மாவை எளிதாக அனுபவிக்க முடிகிறது.

இந்த அனுபவம் நேரடியாக உண்டாகின்ற சந்தர்பம் மனித தேகத்தில் மட்டுமே சாத்தியம்.

## 7. பஞ்சபூத சக்திகள்

பூமியில் எப்படி நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து சக்திகள் ஒன்றை ஒன்று ஈர்த்து பூமியாகி செயல்படுகிறதோ, அதைப்போன்று, இந்த மனித தேகத்தில் கீழ்கண்டவாறு பஞ்சபூத சக்திகள் செயல்படுகின்றன.

1. ஆகாயம் - காமம், குரோதம், மோகம், மதம், மாச்சர்யம்.

2. காற்று - இருத்தல், நடத்தல், படுத்தல், எழுதல், ஓடல்.

3. நெருப்பு - பயம், சோம்பல், பசி, உறக்கம், புணர்ச்சி.

4. நீர் - உதிரம், மூளை, உமிழ்நீர், கொழுப்பு, சுக்கிலம்.

5. மண் - மயிர், தோல், நரம்பு, எலும்பு, தசை.

ஆகாசத்தில் ஆகாசம் சேர்ந்து **மோகம்** என்னும் குணமாகவும், ஆகாசத்தில் ப்ருத்வி சேர்ந்து **ராகம்** என்னும் குணமாகவும், ஆகாயத்தில் நீர் சேர்ந்து **துவேஷம்** என்னும் குணமாகவும் ஆகாசத்தில் நெருப்பு சேர்ந்து **பயம்** என்னும் குணமாகவும், ஆகாயத்தில் காற்று சேர்ந்து **நாணம்** என்னும் குணமாகவும் கூட செயலாற்றுகின்றன.

இவ்வாறே, மேலும் இந்த மனித தேகத்தில் கொடுக்கப் பட்ட இந்திரியங்களின் செயல்களையும், அதற்குக் காரணமான கருவிகளின் தன்மைகளையும் அறியலாம்.

சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம், என பஞ்ச தன்மாத்திரைகளைப் பற்றி முன்பு அறிந்தோம் அல்லவா? அவைகளை உள்வாங்கும் கருவிகளான **காது, தோல், கண், நாக்கு, மூக்கு** போன்றவைகளை **'ஞான இந்திரியங்கள்'** என்கின்றோம்.

இப்பெயர்கள் உறுப்புக்களின் பெயர்களாக இருந்தாலும் அவை ஞானேந்திரியங்கள் அல்ல. மாறாக அந்தந்த உறுப்புக்களில் நின்று, அந்தந்த புலன்களை அறிவனவாகிய ஆற்றல்களே **ஞானேந்திரியங்கள்** எனப்படுகின்றன.

இவைகள் இயல்பாகவே வெளிப்புறமாகவே ஓடி, விஷயங்களை உட்கிரஹித்து, அது சம்பந்தமான கூடுதல் விஷயங்களையும் கொடுக்கிறது.

அது என்ன கூடுதல் விஷயம் என தோன்றுகிறதா?

உதாரணத்திற்கு, தொலைவில் ஒருவர் வருகிறார் என வைத்துக் கொள்வோம்.

முதலில், அது நம் கண்களுக்கு ஏதோ ஓர் உருவம் என்ற அளவில் மட்டுமே தெரிகிறது. பிறகு அவர் நெருங்கி வரவர அவரைப் பற்றிய விவரங்கள் நமக்குத் தெரிகின்றன.

அதாவது அவரது பெயர், நிறம், உறவு, பதவி என பலவும் தெரிகிறது. இக்காட்சியில் முதலில் நம் கண்களுக்குத் தெரிந்தது ஓர் உருவம் மட்டுமே. ஆனால், அவரைப் பற்றிய முழுமையான விபரங்கள் தெரியாமல் இருந்தது. இதுவே **பொதுவாக அறிதல்** என்பதாகும்.

அதன் பின்னர் அவர் அருகே வந்ததும், அவரது பெயர், நிறம், உறவு, படிப்பு, பதவி என அனைத்து விவரங்களையும் சிறப்பாக அறிய முடிகின்றது. இதுவே **சிறப்பாக அறிதல்** என்பதாகும்.

இதனால், அறிவில் இரண்டு வகைகள் உண்டு என்பது புலனாகின்றது. ஒன்று பொருள்களைப் பொதுவாக அறிதல், மற்றொன்று பொருள்களைச் சிறப்பாக அறிதல் என்பனவாகும்.

இதில் ஒரு விஷயத்தை நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

அதாவது, இந்த ஞானேந்திரியங்கள் பொதுவாகப் பொருள்களைப் பற்றி அறியுமே அன்றிச் சிறப்பாக அறியாது.

என்ன குழம்புகிறதா?

விசாரம் செய்வோமே.

செவி என்ற ஒரு கருவி ‘ஓசை’ என்பதை மட்டுமே அறியும்.

அவ்வாறே, தோல் என்பது '**தொடு உணர்வு**' என்று மட்டுமே அறியும்.

கண் இது ஓர் **உருவம்** என்று மட்டுமே அறியும். நாக்கு இது ஓர் **சுவை** என்று மட்டுமே அறியும். மூக்கு இது ஓர் **மணம்** என்று மட்டுமே அறியும். இவ்வாறுதான் புலன்கள் பொதுவாக அனைத்தையும் அறிகின்றன.

அப்படியானால் கூடுதல் விஷயங்கள் எங்கிருந்து சிறப்பாகக் கிடைக்கின்றன?

அதாவது, கண் என்ற கருவி தான் பார்த்த காட்சி ஒன்றை, மனம் என்ற ஒன்றைப் பற்றி, முன்பே பதிவாகி இருந்த விஷயங்களோடு ஒப்பிட்டு, அது இன்னார் என்று தீர்மாணிக்கின்றது.

அதுப்போன்றே, மற்ற கருவிகளான, காது, தோல், மூக்கு, நாக்கு போன்றவைகளும் இவ்வாறே இந்த மனதின் வாயிலாகவே, ஏற்கனவே ஏற்றி வைத்துக் கொண்டுள்ள எண்ணங்களின் அடிப்படையில்தான் அனைத்தையும் சிறப்பாக அறிகின்றன.

அதாவது ஒரு பொருளுக்குரிய பெயர், குணம், தொழில் முதலிய வேறுபாடுகள் ஏதும் தெரிய வராமல் அதை ஒன்று என்ற அளவில் மட்டுமே இந்த இந்திரியங்கள் பொதுவாக அறிவதை '**நிர்விகல்ப தோற்றம்**' (பேதங்கள் இல்லை) என்றும், அதுவே, வேறுபாடுகள் தெரிந்து, அது

இன்ன பொருள் என்று சற்று சிறப்பாக அறிவதை '**சவிகல்ப தோற்றம்**' என்றும் சாஸ்திரம் அழைக்கின்றது.

அதாவது, பேதங்கள் அற்ற நிலையில் **நிர்விகல்பம்** எனவும், பேதங்கள் உள்ள நிலையில் **சவிகல்பம்** எனவும் அறிய வேண்டும்.

இவ்வாறு, தன்மாத்திரைகள் மூலமாக இந்திரியங்கள் கிரஹிக்கும் விஷயங்கள் மனதை அடைந்ததும், அந்த மனம்தான் கர்மேந்திரியங்களாகிய கருவிகளைக் கொண்டு, அதற்கான வேலைகளை செய்து கொள்கிறது என்று அறியும் பொழுது, இவைகள் அனைத்தும் மனதின் செயலென்று தெரிகின்றது அல்லவா?!

சிறிது முனைப்போடு இந்த இந்திரியங்களின் புற ஓட்டத்தை உள்ளோட்டமாக மாற்றினால், ஆத்மனை அறிகின்ற ஞானத்தை பெற உதவியாக இருக்கும்.

இந்த இந்திரியங்களில் செவியாகிய உறுப்பில் நின்று, ஓசை என்னும் புலனை அறிகின்ற ஆற்றலே **செவி இந்திரியம்** ஆகும்.

கண் ஆகிய உறுப்பில் நின்று, ஒளி என்னும் புலனை அறிகின்ற ஆற்றலே **கண் இந்திரியம்** ஆகும்.

இவ்வாறே, பிற இந்திரியங்களையும் கொள்ள வேண்டும்.

செவியாகிய உறுப்பு இருந்தும், ஓசையை அறிகின்ற ஆற்றல் அவ்விடத்தே இல்லாத போது, அங்கு கேட்டல் என்பது நிகழ்வதில்லை.

இவ்வாறே பிற உறுப்புக்களிலும் அந்த, அந்த ஆற்றல் இல்லாவிடில், அந்த அறிவு நிகழ்வதில்லை.

இதனால் உறுப்பு என்பது வேறு, இந்திரியம் என்பது வேறு என்பதும், அந்த இந்திரியங்கள் தங்கி நின்று அறிவதற்கு உறுப்புகள் இடமாகவுள்ளது என்பதும் தெளிவாகும்.

காது ஸ்தூலம், சப்தம் சூக்ஷமம். அதாவது மிகவும் நுண்மையானது. காது என்பது கருவி. கேட்டல் என்பது காரியம். கிரஹிக்கப்படும் சப்தம் என்பது அதனால் விளையும் அறிவு.

இதில் காது அல்லது செவி, ஆகாசத்தின் அம்சம். அது ஆகாசத்தின் அம்சமான விஷயங்களை கேட்டவாறே இருக்கின்றது.

நாம் கேட்கும் சப்தங்கள் 10 அங்கங்கள் ஆகும். ஷட்ஜம், ருஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் ஆகிய ஏழு ஒலிகளும், இஷ்டம், அனிஷ்டம்

மற்றும் ப்ரணிதானம் ஆகிய மூன்று குணங்களும், சப்தத்தின் பத்து அங்கங்களாகின்றன.

அதே போல், தோல் என்பது பௌதிக உடல். தொடு உணர்வு, அது உணர்த்தும் அறிவு. இங்கு தோல் கருவி, தொடல் என்பது காரியம். தொடு உணர்வு, தொடலால் விளையும் அறிவு.

அவ்வாறே, தோல் காற்றின் அம்சம்.

அது ஸ்பரிசத்தால் உணரும் குளிர்ச்சி, வெப்பம், மிருதுத் தன்மை, கடினத் தன்மை ஆகிய விஷயங்களை உணர்ந்தவாறே இருக்கும்.

கண், ஸ்தூல உடலின் ஒரு உறுப்பு. பார்வை அதன் காரியம். காட்சி என்பது ஞானம் அல்லது அறிவு.

கண் நெருப்பின் அம்சமாதலால், அது வெண்மை, கருமை, சிவப்பு, பச்சை, நீலம், மற்றும் எல்லா நிறங்களும் கலந்தது ஆகிய நிறங்களை உள்வாங்கும். நீளம், குட்டை, பருமன், மெலிவு போன்ற பரிமாணங்களையும் உள்வாங்கும். இந்த பத்து ரூபங்களும் கண்வழி நாம் அறியும் ஞானம்.

நாக்கு என்னும் உறுப்பு நீரின் அம்சமாக ரஸம் என்னும் ஞானத்தை உள்வாங்கித் தருகின்றது. உப்பு, புளிப்பு, கசப்பு, இனிப்பு, காரம் மற்றும் துவர்ப்பு ஆகிய அறுசுவைகளையும் அது உள்வாங்கியவாறே இருக்கின்றது.

மூக்கு என்னும் உறுப்பு, நிலத்தின் அம்சமாக நறுமணம் மற்றும் துர்கந்தம் ஆகியனவற்றை முகரலால் உள் வாங்கியவாறே இருக்கின்றது.

பஞ்ச பூதங்களின் தோற்றத்திலிருந்து சரீரம் வரை எவ்வாறு ஸ்ருஷ்டிக்கப்பட்டது என்பதை பார்த்தோம். இதிலிருந்து அறிய வேண்டியது என்ன? எதற்காக இது கூறப்பட்டது? என்பதைப் பற்றி பார்க்கலாம்.

பிறப்பு, இறப்பு என்பது சுழற்சி வட்டம். இது தோற்றம், வளர்ச்சி, ஒடுக்கம் ஆகிய நிலைகளை கொண்டது. அதாவது ப்ரபஞ்சம் ப்ரம்மத்திலிருந்து பிறந்து, பரிணமித்து மீண்டும் அந்த ப்ரம்மத்திலேயே ஒடுங்கும். இந்த ஒடுக்க நிலையையே ப்ரளயம் என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இதுவரை நாம் பார்த்து உணர்ந்தவற்றில் எண்ணங்களை கொண்ட மனமே பிறக்கிறது. அது தன்னில் பதிவாகியுள்ள எண்ணங்களை அனுபவிக்கவே, புதிது புதிதாக தேகத்தை எடுத்துக் கொள்கிறது. ஆக இந்த எண்ணங்கள் இருக்கும் வரை, இந்த சுழற்சியில் சீவன் மாட்டிக்கொள்கிறான்.

அப்படியானால் எண்ணங்களை சீர் படுத்தி, மீண்டும் பதிவுகள் புதிதாக மனதில் சேராமல், ஜாக்கிரதையாக அதற்கான சரியான பயிற்சிகளை மேற்கொண்டால், சீவன் இந்த சுழலில் இருந்து வெளியேறி விடுகிறது.

## சிருஷ்டி

இந்த உலகின் அனைத்து சீவர்களும் பிறப்பில் பொதுவானதாகும். ஆனால், மனிதன் மட்டுமே தனக்கு கொடுக்கப்பட்ட பகுத்தறிவால், நன்மை, தீமைகளை அறிந்து, சிந்தித்து செயலாற்றும் தகுதியை பெற்றிருக்கிறான்.

மனிதன் தன்னை யார்? என்ற கேள்வியை முன்வைத்தால், அது எண்ணங்களின் தொகுதி என்பது தெளிவாகப் புரியும். இந்த எண்ணங்களைத்தான் "**சூக்ஷ்ம சரீரம்**" என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இந்த **சூக்ஷ்ம சரீரம்**, **ஸ்தூல சரீரம்** ஆகிய இரண்டு சரீரங்களுக்கும் காரணமான **காரண சரீரம்** என இந்த மூன்று சரீரங்களும் ஒன்றேயான அந்த ப்ரம்மத்திடமிருந்தே வெளிப்பட்டு, அதே ப்ரம்மத்தினாலேயே செயல் நிலைக்கு வந்து, மீண்டும் அதே ப்ரம்மத்திலேயே ஒடுங்குகின்றன.

## 6. விசாரத்தின் விளைவு

ப்ரபஞ்ச உணர்வு வெளி ப்ரம்மத்தின் ப்ரதிபலிப்பே என கூறலாம். இங்கிருந்து தான் அனைத்துமே தோற்றத்திற்கு வருகின்றன என்றாலும், அனைத்தும் பூரணமாகவே இருக்கிறது.

அதுவும் பூரணம். இதுவும் பூரணம். பூரணமாகிய அதில் இருந்து பூரணமாகிய இதை எடுத்த பின்பும், அந்த பூரணமே எஞ்சி இருக்கின்றது.

இவ்வாறு ப்ரஹ்மம் மாறுபடாதவராக உள்ளார். தன்னுடைய முழுமைத் தன்மையில் இருந்து சிறிதும் குறைவு படுவதில்லை. அந்த வகையில் அதிலிருந்து தோன்றிய எண்ணத் தொகுதிகள் அடங்கிய காரண சரீரமும், அவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வருகின்ற சூக்ஷ்ம சரீரமும் பூரணம். அவ்வாறே, இந்த ஸ்தூல சரீரமும் பூரணம்.

அது எப்படி அழியக்கூடிய இந்த ஸ்தூல சரீரம் பூரணம் ஆகும்? இங்குதான் நாம் சற்று விசாரம் செய்துப் பார்க்க வேண்டும். அதாவது, பூரணத்தில் இருந்து பூரணத்தை எடுத்த பின்பும், எஞ்சி இருப்பது பூரணமே என்பது எப்படியெனில், இந்த ஸ்தூல சரீரம் நாம் நினைப்பதுப் போன்று முற்றிலுமாக அழிந்துவிடுவதில்லை.

அது எப்படி தன் மூலத்தோற்றமாகிய அணுவில் இருந்து வெளிப்பட்டு பல்வேறு உணவுகளை உண்டு, இந்த உடல் அன்னமய கோசம் ஆனதோ, அதே உடல் மீண்டும் புதைக்கும் பொழுது, மற்ற புழு, பூச்சிகளுக்கு உணவாகி அதன் உடல்களின் வாயிலாக பெருக்கின்றது.

அல்லது தீயில் எரிக்கும் பொழுது, அந்த சாம்பல் என்பது செடி, கொடிகளுக்கு உணவாகி, அந்த தாவரங்களை மற்ற மிருகங்கள், பறவைகள் மற்றும் மனித உடல்களில் உண்டு, மீண்டும் உடல்கள் பருக்கின்றது.

ஆக, எப்படிப் பார்த்தாலும், இது மாற்றத்திற்கு மட்டுமே உட்படுகின்றதே தவிர, உண்மையில் இவைகள் இல்லாமல் போவதில்லை.

ஆகவே, இந்த மனம் இல்லாமல் போகும் பொழுதுதான், இந்த உடல் இல்லாமல் போகும் என்பதை அறிந்துதான் மெய்ஞானிகள் மனமற்ற நிலைக்கு மனிதனை அழைத்துச் செல்ல ஆர்வம் காட்டுகின்றனர்.

ஆனால், இந்த பாமர மனிதனோ, பல்வேறு ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால்தான் இருப்பு கொள்ள விரும்பு கின்றானே தவிர, தன் உண்மை சொரூபத்தை அறிந்து, அழிவுக்கு உட்படாத தன் உண்மை இருப்பில் இருக்க மறுக்கின்றான். அதற்குக் காரணம் அவனது அறியாமை என்றால், அது மிகையாகாது.

இந்த அறியாமையை நீக்கத்தான் சாஸ்திரமும், சத்குருவும் தேவைப்படுகின்றது.

ஆகவே, அந்த எல்லையற்ற ப்ரம்மத்தை தேகத்தினுள் என பார்க்கும் போது எல்லைக்குட்பட்டது போன்ற தோற்றத்தை அளிக்கின்றதே தவிர, உண்மையில் அதனுள்ளே அதுவே ஆளுமை செய்கிறது.

ஆக, பெருமை - சிறுமை, உண்மை - பொய், நல்லவன் - கெட்டவன் போன்ற இருமைகளுக்கு இங்கே இடமே இல்லை.

இந்த பேதங்களை விடும் போது மட்டும்தான் மனிதன் மகத்தானவனாக மாறி அனைத்தும் ஒன்றே என அறிகின்றான்.

இதையெல்லாம் விசாரித்துப் பார்க்கும் போது, எண்ணங்கள் இல்லாமல் இருப்பது மட்டுமே சிறப்பு எனவும், மேலும், புதிய எண்ணங்கள் தோன்றாமல் இருப்பதும் நல்லது என்றும், எண்ணங்களற்ற நிலையை எண்ணிப்பார்க்கத் தோன்றும்.

இவ்வாறு எதை எண்ணுவதாக இருந்தாலும், அதற்கு எண்ணம்தான் பிரதானம் என்பதினால், மனிதன் எண்ணங்கள் அற்ற நிலைக்கு செல்வது என்பது எப்படி சாத்தியமாகும் என்ற சந்தேகம் எழும்?

அதாவது, இங்கு எண்ணங்கள் அற்ற நிலை என்பதை எப்படி அறிந்துக் கொள்ள வேண்டும் என்றால், எழுகின்ற எண்ணங்களை கடந்த காலத்திற்கும், எதிர் காலத்திற்கும் எடுத்துக் கொண்டு செல்லாமல், அதை அப்பொழுதே அந்த நிகழ்காலத்தில் அனுபவமாக்கி முடித்துவிடுவது மட்டுமே நடைமுறையில் எளிதாக சாத்தியம் ஆகும்.

ஆகவே, தேகம் இருக்கும் வரை மனம் எதையாவது பற்றிக் கொண்டு, பழைய சம்ஸ்காரங்களிலிருந்து, எதையாவது எடுத்து வந்துக் கொண்டேதான் இருக்கும்.

அது அந்த இருப்பின் இனிதான விளையாட்டு என்பதை அறிந்து, அவ்வாறு வருகின்ற எண்ணங்களை அப்பொழுதே, நடைமுறையில் அனுபவத்திற்குக் கொண்டு வந்து முடித்துவிட வேண்டும். அல்லது அதை அப்படியே மனதில் இருந்து நடைமுறைப்படுத்தாமல், முழுவதுமாக நீக்கி விட வேண்டும்.

அதைவிடுத்து, அவைகளை மீண்டும், மீண்டும் சிந்தித்து கொண்டே இருப்பதற்கு இடம் கொடுத்தால், அது ஆழ்மன பதிவுகளாக சேகரிக்கப்பட்டு, காரண சரீரமான சஞ்சித கர்மாவில் சேகரிக்கப்படும். அதுவே, மீண்டும் சூக்ஷும மனமாக வெளிப்பட்டு, ஸ்தூல சரீரமாக பிறப்பிற்கு வரும். எனவே ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்கள் இல்லாமல் இருப்பது மட்டுமே நாம் இருப்பாய் இருப்பதற்கான நிலை என்பதை என்று உணர்கின்றோமோ, அன்றுதான் நாம் அந்த இருப்பில் இன்பத்துடன் இனிதாய் இருக்க முடியும்.

எனவே, ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களில் உயர் எண்ணங்களான மேம்படுத்தப்பட்ட எண்ணங்களை எளிதாக நடைமுறைப் படுத்தியும், கீழான எண்ணங்களை அப்பொழுதே மனதில் இருந்து நீக்கிவிடத்தேவையான பயிற்சிகளின் வாயிலாக நீக்கி விடவும் வேண்டும்.

ஆகவே, சாஸ்திரங்களும் சத்குருநாதரும் உபதேசித்த உன்னத விசயங்களை விரிவாக விசாரம் மேற்கொண்டு, அந்த உபதேசங்கள் மூலம் கற்றவற்றை சிரவணம், மனனம் மற்றும் நிதித்யாஸனம் என ஒவ்வொரு படி நிலைகளில் பழகி வந்து, பண்புடன் இந்த வாழ்க்கையை இயம, நியமத்துடன் ஒருவன் வாழ்ந்து வந்தான் என்றால், அவனே, எல்லையற்ற அந்த பரிபூரணத்தை அனுபவமாக்கும் உயர் பரிணாமத்திற்கு உயர முடியும் என்பதை எடுத்துக் கூறவேண்டி உள்ளது.

அந்த உயர் பரிமாண அனுபவ நிலையில் பிரபஞ்ச எண்ணங்களே, எல்லாமாக இருப்புக் கொண்டு, இந்த மொத்த பிரபஞ்சத்தையும் ஆளுகின்றது என்பதை அறியும் பொழுது, அதை அப்படியே ஏற்றுக் கொண்டு, மறுப்பு ஏதும் காட்டாமல், சும்மா இருப்பது ஒன்று மட்டுமே சுகம் எனக்கருதி, வருவதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனமாக மாறிவிடும்.

இந்த மனமே சுத்தி செய்யப்பட தூய்மையான மனம் எனப்படுகின்றது. இந்த மனநிலையில் இருப்பவர்களுக்கே, எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ப்ரம்மம் அனுபவமாக மாறும்.

ஆகவே, அநாதியான ப்ரம்மம் தன் இச்சையால் தன் விருப்பத்தை தானே, ஏதாவது ஒரு வகையில் நிகழ்த்திக் கொண்டிருப்பது புரிந்து, உலகில் தோன்றிய ஓரறிவு முதல் ஆறறிவு கொண்ட அனைத்து சீவர்களுமே அந்த பிரபஞ்ச எண்ணங்களால்தான் சிருஷ்டி செய்யப்படுகின்றது என்பதுவும் புரியும்.

இந்த எண்ணங்கள் தான் பிறவிச் சங்கிலியாகவோ (பல பிறவிகள்) தலைமுறை சங்கிலியாகவோ (அப்பா, தாத்தா, கொள்ளு தாத்தா, மகன், பேரன் போன்ற உறவுகளில்) அமைகிறது. இவற்றையும் எண்ணங்களே தீர்மாணிக்கின்றன. இப்படி எண்ணற்ற எண்ண உடல்களைத்தான் எல்லா சரீரங்களிலும், நாம் நமது இந்த சரீரத்தில் எண்ணங்களால் பார்க்கிறோம்.

இப்போது இவன் என்னவன், இது என்னுடையது, என் மகன், என் பேரன், என் மனைவி, என் கணவர், எனது சொத்து, எனது இடம், என சொல்வது வேடிக்கையாகத் தோன்றும். எனவே, இந்த பரந்து விரிந்து காணப்படுகின்ற எண்ணத் தொகுதிகள் அனைத்தும் ப்ரம்மம் மீதே நிலைப் பெறுகிறது. அதாவது ப்ரம்மத்தின் ப்ரதிபலிப்பே இந்த ப்ரபஞ்சம். அந்த ப்ரபஞ்ச எண்ணங்கள் கருவை தாயின் தொப்பூழ் கொடி தாங்கி இருக்கிறது போல, இந்த அனைத்து எண்ணங்களையும், இந்த ப்ரபஞ்சமே தன்னில் தாங்கி வழி நடத்தி செல்கிறது.

இவை அனைத்தையும் பார்க்கும் போது, மனிதன் தான் வந்த இந்த உன்னதமானப் பிறவி நோக்கத்தை அறியாமல், மனதோடும், எண்ணங்களோடும், புத்தியோடும், சரீரத்தோடும் தன்னை நெருக்கமானவனாக சம்பந்தப்படுத்திக் கொண்டு, சதா புலம்பிக் கொண்டும் இருப்பதினாலே, தன் உண்மை இருப்பை அறிய முடியாமல், மீண்டும், மீண்டும், பல்வேறு புதிதான எண்ணப் பதிவுகளினால், அதற்கான உடல் எடுத்துக் கொண்டு, அவைகளை அனுபவமாக்க பிறப்பிற்கு வருகிறான் எனத் தெரிகிறது.

உண்மையில் நாம் காணும் இந்த ப்ரஞ்சம் ஓர் நாடக மேடை. சீவன் எந்த இடத்தில், எந்த கதாபாத்திரத்தில் என்ன செய்து, எவ்வாறு நடிக்க வேண்டும், என்ன வசனம் பேச வேண்டும் என்பது போன்ற அனைத்தையும் வரையறுத்துக் கொண்டே தான் பிறக்கிறான்.

எனவே, இவன் ஏற்றிவைத்துக் கொண்ட ஏகப்பட்ட சூக்ஷும எண்ணங்கள்தான், திட்டமிட்டபடி ஒரு ஸ்தூல சரீரத்தில் வந்து, நடைமுறையில் அனுபவமாக அதை செயல் படுத்தி, வந்த தன் வேலை முடிந்ததும், இந்த ஸ்தூல சரீரத்தை விட்டு, மீண்டும் எண்ண உடலில் (சூக்ஷும சரீரத்தில்) சேர்ந்து, அடுத்த சஞ்சித எண்ணங்களை அனுபவிக்க (அடுத்த பிறவிக்கான) அதற்கேற்ப சரீரத்தை பிராப்த எண்ணங்களாக எடுத்துக் கொள்கிறது.

இதில் இதை நான் நினைத்தேன், இதை நான் செய்தேன், என்ற பெருமைகள் சிறுமைகளுக்கு இங்கு இடமே

இல்லை. இப்படிச் சொல்வது நம்முடைய அறியாமையே என்பது இப்பொழுது விளங்குகின்றதா? எனவே, அனைத்துமே ஏற்கனவே திட்டமிடப்பட்டது. அது ஒன்றேயான அந்த ப்ரம்மத்தினால் வழி நடத்தப்படுகின்றது என்று உறுதியாக உணர்ந்தவன் உண்மையில் ஆணவத்தை அடைவதில்லை. அதனால், அவனுக்கு புதிய எண்ணங்களாக கர்மாவும் உண்டாவதில்லை, இதனால் அவன் மாயையில் இருந்து முழுவதுமாக விடுபடுகின்றான்.

இவனே, **ஆணவம், கன்மம், மாயை** என்ற மும்மலங்களையும் வென்றவனாகவும், இந்த பிரபஞ்சம் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் எழுந்து, இயங்கி, மீண்டும் ஒடுங்குகின்ற ஒரு வட்டம் என்பதை அறிந்துக் கொள்கின்றான்.

ஆகவே, நடந்து முடிந்தவற்றை (Past) மாற்ற முடியாது. வரப்போவது (Future) என்ன என்பது தெரியப் போவதில்லை. நடப்பது ஒன்று மட்டுமே (Present) நம் கையில் இருக்கின்றது. ஆனால் அதுவும் நம் செயல் இல்லை.

ஆக வாழ்க்கை என சொல்வது கானல் நீர் போன்று இருப்பது என்பதினால், அது தோற்ற மாயையே தவிர, உண்மை இல்லை. ஆகவே, எண்ணங்கள் தான் நிஜம். அதன் நிழல் தான் சரீரம். இதுவே நிழலும், நிஜமும் என்று முண்டகோபநிஷதம் உபதேசிக்கின்றது.

அப்படியானால் செய்ய வேண்டியது என்ன?

தனக்குள்ளே இருந்து கொண்டு, தன்னைத்தான் அறிந்து, அந்த ப்ரம்மத்திற்கு வேறாக ஒன்றுமே இல்லை என்பதை உணர்ந்துக் கொள்வதைத்தான் **கேனோபநிஷதம்** அழகாக வழிகாட்டுகிறது.

நான் விரும்பாமல் இருந்தாலும், இந்த மனம் தானாகவே புறத்தே செல்கிறது. கண் தானாகவே பார்க்கிறது. நான் விரும்பவில்லை. அப்படி இருக்க இவற்றை என்னை அல்லாமல் என்னுள் இருந்து இயக்குவது யார்? என்ற கேள்வியையும் எழுப்பி, அதற்கான ஆழமான விடையையும் விளக்குகிறது. ஆகவே, பயன்களில் பற்று வைக்காமல் விருப்பு, வெறுப்புக்கள் இன்றி எல்லாக் காரியங்களையும் ஒழுங்காக ஆற்றுவது ஒன்றுதான் நாம் செய்யவேண்டியது ஆகும்.

தனக்கென ஒரு அடையாளம் என்பது கூட, புதிதாக ஒரு பற்றை உண்டாக்கி விடுகின்றது என்பதினால், எதிலும் பற்று வைத்து, புதிதாக கர்மாவை உண்டாக்கிக் கொள்ளாமல், விதிக்கப்பட்ட செயலை, விவேகத்துடன் பலன்களை எதிர்ப் பார்க்காமல் அதை ஈஸ்வர செயலாகச் செய்துக் கொண்டு வருகின்ற பொழுது, அதனால் மனம் எந்த பாதிப்புகளுக்கும் உட்படாமல், அமைதியான சலனமற்ற நிலையில் இருந்து கொண்டு இருக்கும் இருப்பு நிலையே, அந்த பரிபூரண ப்ரம்மத்தின் இருப்பாகும்.

**ஓம் தத் சத்!**

# சிருஷ்டி



வேகவைத்த நெல்லைப் பூமியில் விதைத்தால் அது எப்படி மீண்டும் முளைக்காதோ, அதுப்போல சித்தை அறிந்து, சித்தத்தை துறந்து, சித்தனான ஒருவன் இறப்பானேயானால் அவனுக்கு மறு ஜென்மம் என்பது கிடையவே கிடையாது.